விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பத்னாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2040 மார்கழி 20 திங்கட்கிழமை (04.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 16

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து
RAMCO


## தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் இன்று கொழும்பில் மீண்டும் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தீர்மானம் எடுப்பதில் நெருக்கடிகளை எதிர் நோக்கியுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு இன்று மீண்டும் கொழும்பில் கூடி எடுக்க வேண்டியதீர்மானம் குறித்து ஆராயவிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவிருக்கும் இக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ள போதிலும் எம்.கே. சிவாஜிலிங்கம் மற்றும் என்.சிறிகாந்தா ஆகியோருக்கு அழைப்பு (02ஆம் பக்கம் பார்க்க)

## பொன்சேகாவுக்கு இடமளிக்க வேண்டும் தேர்தல் ஆணையாளர் வேண்டுகோள்



(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் மீது அரசாங்க ஊடகங்களில் சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் பதிலளிப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றினால் ஒலி, ஒளி பரப்புச்செய்யப்படும் நிகழ்ச்சிகளில் ஜெனரல் சரத் (16ஆம் பக்கம் பார்க்க)

# ஊழல் மேற்கொண்ட அரசியல்வாதிகள் அமெரிக்காவுக்குள் நுழைய முடியாது!

## விரைவில் சட்டமூலம் வருகிறது

(கொழும்பு)

நிதிமோசடி மற்றும் ஊழல்களை மேற்கொண்ட அதிகாரிகள், ஜனாதிபதிகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கான நுழைவு அனுமதியை நிராகரிக்கும் சட்டமூலத்தை அமெரிக்கா விரைவில் கொண்டுவரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (16ஆம் பக்கம் பார்க்க)

## சரத் பொன்சேகாவுக்கு ஆதரவான பேரணி மீது ஆளும் தரப்பு தாக்குதல்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரித்து நேற்று ஒழுங்குபடுத்தப்பட்டு நடந்த தேர்தல் ஊர்வலத்தினை ஆளும்கட்சியினை சேர்ந்தோர்கல் வீசி தாக்கி துரத்தினர்.

அமைச்சர் ஒருவரின் தலைமையிலான அரச ஆதரவாளர்களே இந்த தாக்குதலை மேற்கொண்டதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் தாக்குதலில் அமைச்சரின் ஆதரவுக் குழுவினர் சிக்கி கொண்டதை தொடர்ந்து பொலிஸார் கண்ணீர்ப்புகை குண்டு தாக்குதல்களை நடத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

கிரிபத்கொடவில் பிரதான வீதியில் சென்று கொண்டிருந்த (16ஆம் பக்கம் பார்க்க)

## குடும்ப ஆட்சிக்கு முற்றுப்புள்ளிவைத்து நாட்டில் ஜனநாயகம் நிலைநாட்டப்படும்!

### பொன்சேகா வவுனியாவில் உறுதி

(வவுனியா)

நாட்டில் இன்று காணப்படும் ஊழல் நிறைந்த குடும்ப ஆட்சி முறைக்கு முற்றுப்புள்ளி வைத்து ஜனநாயகம் நிலைநாட்டப்படுமென எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். வவுனியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இலங்கை நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள்அனைவரும் இன,மத, மொழி வேறுபாடின்றி, எவ்வித அச்சமும் பயமுமின்றி வாழ்வதற்காக அரசியலமைப்பை (02ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரனின் இறுதி நிகழ்வில் இ.தொ.கா. கலந்து கொள்ளாது

(கொழும்பு)

காலம் சென்ற மலைய்க மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனின் இறுதிக் கிரியைகளில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கலந்து கொள்ளாது என அக்கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தெரிவித் துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றில் ஒளிபரப்பப்பட்ட அரசியல் (16ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் சந்திரசேகரனின் இறுதி நிகழ்வுகள் இன்று!

(கொழும்பு)

மாரடைப்பினால் மரணமான மலையக மக்கள் முன்னணித்தலை வரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரனின் இறுதிக்கிரியைகள் இன்று தலவாக்கலையில் நடைபெறவுள்ளது.

பெ.சந்திரசேகரனின் பூதவுடலுக்கு தலவாக்கலையில் உள்ள அரச இல்லத்துக்குச் சென்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று தனது அஞ்சலியை செலுத்தினார்.

அமைச்சர் பெ.சந்திரசேகரனின் மறைவு மலையக மக்களின் அரசியல் பிரதிநிதித்துவத்துக்கு பாரிய வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளதாக இலங்கை (16ஆம் பக்கம் பார்க்க)

## ஜெனரல் பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கலாம்–ஜே.வி.பி.

(கொழும்பு)

எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கு எதிராக் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் முடிந்தால் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரிக்கை விடுத்துள்ளன.

ஆயுத கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் அரசாங்கம் சுமத்தி வரும் குற்றச்சாட்டுக்களுக்கு ஜெனரல் சரத் பொன்சேகா விளக்கமளிக்கத் தயார் என ஜே.வி.பி நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

மேலும் தமக்கு (16ஆம் பக்கம் பார்க்க)

மரணத்தைத்தரும் "டெங்கு" ஆபத்து



நுளம்பை ஒழிக்க வாரீர்



டெங்கு ஒழிப்பு வாரம் 04.01.2010 – 10.01.2010

அன்புக்கினிய பொதுமக்களே! உங்கள் சுற்றுச்சூழலை தூய்மைப்படுத்தி நுளம்பை அழியுங்கள்.

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம். அனுசரணை – வலம்புரி



மல்லாகம் புதுமை மாதா ஆலய ஒளி விழா கடந்த 29ஆம் திகதி இடம் பெற்றது.இவ்விழாவில் பங்குத்தந்தை மலர் மாலை அணிவித்து வரவேற்கப்படுவதையும், பங்குத் தந்தை அருட்திரு நிருபன் அடிகளாார் மங்கல விளக்கேற்றுவதையும், கரோல் கீதங்கள் இசைக்கும் பங்கு யுவதிகளையும், விழாவை சிறப்பித்தவர்களுடன் பங்குத் தந்தை நிற்பதையும் படங்களில் காணலாம்.

## வலிகாமம் கல்வி வலயத்தில் டெங்கு விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

டெங்கு தொடர்பான விழிப்புணர்வுக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு வலிகாமம் வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறுவதாக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் பா.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இதில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையிலான குழுவினர் டெங்கு விழிப்புணர்வுக் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

இவ் விழிப்புணர்வுக் கூட்டத்தில் வலிகாமம் வலயத்திற்குட்பட்ட அனைத்து பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார். (ச-5)

## தமிழ்த் தேசிய...

விடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இரு பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் இடையில் சந்திப்புகள் இடம் பெற்ற பின்னர் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு இன்று கூடவிருக்கின்றது.

இக் கூட்டத்தில், இச் சந்திப்புகளில் பேசப்பட்ட விடயங்கள்குறித்து ஆராயப்படவுள்ளதோடு இது பற்றி தலைவர் விளக்குவார் என எதிர்பார்க்கப்படுவதாக தெரியவருகின்றது.

மேலும் ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிடும் எம்.கே.சிவாஜிலிங்கம் (ரெலோ) கட்சியின் தீர்மானத்தை மீறி போட்டியிடுவது, தேர்தல் பகிஷ்கரிப்பு என அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கொண்டுள்ள நிலைப்பாடு மற்றும் ஆட்சி மாற்றத்துக்காக பொது வேட்பாளர் சரத் பொன்சேகாவை ஆதரிப்பது தொடர்பாக சில நாடாளுமன்ற உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்டுள்ள கருத்துகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட விருக்கின்றது.

இருப்பினும் இன்றைய கூட்டத்திலும் இத் தேர்தல் தொடர்பாக தீர்மானம் ஒன்றை எடுக்கக் கூடிய வாய்ப்புகள் இருக்காது போல் தெரிகின்றது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை தமது கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் இத் தேர்தலில் போட்டியிடுகின்ற போதிலும் அவருக்கு எதிராக தமது கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க முடியாது இருப்பது குறித்து ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தனிப்பட்ட ரீதியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தலை வர் இரா.சம்பந்தனை சந்தித்து தெளிவுபடுத்தியதாகவும் தெரியவருகின்றது. (ச-5)

## இலங்கைப் பிரச்சினைகளை கருவாகக் கொண்ட திரைப்படம்

### கின்னஸ் சாதனை படைத்தது

(சென்னை)

இலங்கைப் பிரச்சினையை கருவாகக் கொண்டு இந்தியாவில் தயாரிப்பட்ட தமிழ் திரைப்படம் கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

சிவப்பு மழை என்ற குறித்த திரைப்படம் குறைந்த நாட்களில் தயாரிக்கப்பட்ட படம் என்ற பெருமையை பெற்றுக் கொண்டுள்ளது.

குறித்த திரைப்படம் வெறும் 12நாட்களில் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்வரும் பொங்கலுக்கு அத் திரைப்படம் திரையிடப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திரைப்படத்தில் சுமார் 600திரைப் பட தொழில்நுட்பவியலாளர்கள் பங்கு பற்றியுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

சுரேஷ் ஜோக்கிம் மற்றும் மீரா ஜெஸ்மீன் ஆகியோர் இந்தத் திரைப்படத்தின் பிரதான பாத்திரங்களை ஏற்று நடித்துள்ளனர்.

1990ஆம் ஆண்டு பிரித்தானிய நிறுவனமொன்றினால் தயாரிக்கப்பட்ட ஆங்கில திரைப்படமொன்றே இதுவரையில் குறுகிய காலத்தில் தயாரிக்கப்பட்ட படத்திற்காக உலக சாதனையை வகித்து வந்தது.

குறித்த திரைப்படம் பதின்மூன்று நாட்களில் தயாரிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படு கிறது.

குறித்த சிவப்பு மழை என்ற தமிழ் திரைப்படத்தை கிருஸ்ணமூர்த்தி என்ற இயக்குநர் இயக்கியுள்ளார். (ச-5)

## குடும்ப ஆட்சி...

மாற்றியமைப்போம். இவ்வாறான அரசியலமைப்பின் மூலம் அனைவருக்கும் அவர்களின் சந்ததி யினர் எதிர்பார்க்கின்ற வாழ்வை நிச்சயம் பெற்றுக்கொடுப்போம்.

இடம்பெயர்ந்து நலன்புரி கிராமங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மக்கள் எவ்விதமான அடிப்படை வசதிகளின்றி அடைத்து வைக்கப் பட்டுள்ளனர்.

அடைத்துவைக்கப்பட்டிருந்த இம் மக்கள் முகாம்களில் இருந்தபோது அவர்க ளுக்கு ஒதுக்கப்பட்ட வசதிகளை வழங்காமல் அரசு தாமதப்படுத்தியது.

ஆனால் இன்று அம்மக்களை அவர்களின் சொந்த இடங்களில் எவ்வித அடிப் படை வசதிகளையும் செய்யா மல் மீளக்குடியமர்த்திவிட்டு அவர்களிடம் வாக் குகேட்டு நிற்கின்றது.

இதற்கு நீங்கள் செவி சாய்க்காமல் இவ் அரசின் ஆட்சியை கலைத்து ஜனநாயகத்தை நிலைநாட்டவேண்டும். உங்களுக்கு தற்போது கிடைத்துள்ள இச்சந்தர்ப் பத்தை நீங்கள் பயன்படுத்தி மாற்றத்தை கொண்டு வர வேண்டும்.

நாம் ஆட்சிக்கு வந்ததும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்தம் 2ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.

முப் படை யினர் மற்றும் அனைத்து அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என்றும் சரத் பொன்சேகா மேலும் தெரிவித்தார். (ச-3,5)

## நிரந்தர கடமை நிலையத்துக்கு திரும்பாது பகிஷ்கரிப்பு

(யாழ்ப்பாணம்)

பொருத்தமான நடவடிக்கை எடுக்கும் வரை நிரந்தர கடமை நிலையத்துக்கு இன்று முதல் திரும்புவதில்லை என வடக்கு மாகாண ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியை சந்தித்து பொருத்தப்பாடான நடவடிக்கை எடுக்கும்வரையும் மற்றும் சட்டநடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்வதாகவும், இன்று இவ் ஆசிரியர்கள் தமது நிரந்தர கடமை நிலையத்திற்கு கடமைக்கு திரும்புவது இல்லை எனவும், இன்று மாலை 2.30மணிக்கு ஆரியகுளம் உயர்கல்வி நிலையத்தில் மீண்டும் கூடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ்.ஞானாகரன் அறிவித்துள்ளார். (ச)

## வாக்குச்சீட்டு வாங்குவதற்கு எடுத்த முயற்சி கம்பஹாவில் முறியடிப்பு

### தேர்தல் திணைக்களத்திடமும் முறையீடு

ஆளும் கட்சியின் கம்பஹா பிரதேச அரசியல்வாதியினால் பொதுமக்களிடமிருந்து வாக்குச்சீட்டுகளை வாங்குவதற்கு எடுத்த முயற்சி தேர்தல் திணைக்களத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

வறுமையிலுள்ள பொதுமக்களிடமிருந்து இவ்வாக்குச்சீட்டுகளை பெற்றுக்கொண்டு அவர்களுக்கு ஒரு தொகை பணத்தை வழங்குவதே அவ்வரசியல்வாதியின் திட்டமாகவிருந்தது.

இத்திட்டத்தின்படி வாக்குச்சீட்டுக்களை விற்போர் வாக்களிப்பு நிலையத்திற்கு சென்று உரிய ஆவணங்களை பூர்த்திசெய்து அவர்களுக்கான வாக்குச்சீட்டை பெற்றுக்கொள்ள வேண்டும். பின்பு அதனை வெளியில் எடுத்து வந்து குறிப்பிட்ட நபர்களிடம் கொடுத்து அதற்கான பணத்தை பெற்றுக்கொள்ளவேண்டும் என அறிவுறுத்தப்பட்டிருந்தார்கள்.

அவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் வாக்குச்சீட்டில் தேவையான வேட்பாளருக்கு புள்ளடியிடப்பட்டு இன்னொரு வாக்களிப்பவரால் அது உள்ளே எடுத்துச்செல்லப்பட்டு வாக்களிப்பு செய்யப்படும். அவ்வாறு முன்னவரின் வாக்குச்சீட்டை பயன்படுத்தி வாக்களிப்பு செய்த பின்னர் தனது உண்மையான வாக்குச்சீட்டை முன்னர் போலவே அவர் வெளியில் எடுத்து வருவார். அவரின் வாக்குச்சீட்டை இன்னொருவருக்கு வழங்கப்படும்.

இவ்வாறான மோசடிக்காக ஒவ்வொரு வாக்காளருக்கும் 500ரூபா வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறான மோசடி திட்டத்தை ஜே.வி.பி மூலம் தேர்தல் திணைக்களத்திற்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதே பாணியிலான மோசடி தொடர்பான பல முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாகவும் உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ச-5)

## அரச தொலைக்காட்சி சேவைகள் யாழ்ப்பாணத்திற்கு விஸ்தரிப்பு!

தேர்தல் பிரசார நடவடிக்கைகளை யாழ்ப்பாணத்தில் முழு அளவில் மேற்கொள்ளும் பொருட்டு அரசு, அரச தொலைக்காட்சி சேவைகளை அவசர அவசரமாக யாழ்.குடாநாட்டுக்கு விஸ்தரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்று முதல் அரசின் கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களான ஐ.ரி.என் மற்றும் ரூபவாஹினி தொலைக்காட்சி சேவைகளை அரசு பலாலியில் உள்ள கட்டுப்பாட்டு கோபுரங்கள் ஊடாக யாழ். குடா நாட்டுக்கு விஸ்தரிக்க உள்ளது.

கொக்காவில் உள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவடைவதற்கு சில வாரங்கள் எடுக்கும் என்பதால் அரசு பலாலி கோபுரத்தை பயன்படுத்த திட்டமிட்டுள்ளதாக ஊடகத்துறை அமைச்சக செயலாளர் டபிள்யூ .பி.கனெகெல்ல தெரிவித்துள்ளார். கொக்காவில் பகுதியில் 400மில்லியன் ரூபாய் செலவில் 172மீற்றர் உயரமான கோபுரம் ஒன்றை அரசு நிர்மாணித்து வருகின்றது. (ச-5)

## மரண அறிவித்தல்

### திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை



மலேசியாவைப் பிறப்பிடமாகவும், இளவாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி யோசப்பின் சூசன் சூசைப்பிள்ளை (1.1.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறகறி சூசைப்பிள்ளையின் (ஓய்வுப் பெற்ற பிரதம இலிகிதர் (P.W.D.)அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான திரு.திருமதி லூக்காஸ்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு திருமதி கிறகறி தம்பதியினரின் அன்புமருமகளும், திருமதி Dr.பற்றிமா பிலோமினா (பொது வைத்தியசாலை கொழும்பு), கிறகறி, இமானுவேல் (U.K), வின்சன்றலூக்கஸ் (விவசாயத் திணைக்களம் யாழ்ப்பாணம்), மறினற் யூலியற் (U.K) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஜெயக்குமார் ஹென்ஸ்மன் (கணக்காளர்), லில்லி பெனடிற்றா, வனஜா (U.K), றோஸ் வத்சலா (ஆசிரியை உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்), அன்ரன் (U.K) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 05/01/2010 நாளை(செவ்வாய்க்கிழமை) பி.ப.3.00மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து நல்லடக்க ஆராதனைக்காக இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அன்னம்மாள் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

'திரேசா வாசா'
பிரதானவீதி,
இளவாலை.

T.P. 0778051724
0213206122

தகவல்
குடும்பத்தினர்

(195)


**தங்குமிட வசதிகள்**

குளிரூட்டப்பட்ட (AC) அறைகள், தங்குமிட வசதிகள் யாழ். நகரில் செய்து தரப்படும்.
தொடர்புகளுக்கு,
தொலைபேசி எண்:-
077 7283811,
077 1387115
(190)

**விற்பனைக்கு**

பாடசாலை மாணவர்களுக்கான சப்பாத்துக்கள், சொக்ஸ் உட்பட அனைத்து வகையான காலணிகளும், பாடசாலை உபகரணங்களும், பயிற்சிப் புத்தகங்களும் மலிவான விலையில் ஒரே கூரையின் கீழ் பெற் றுக் கொள்ள நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்,
சுப்பர் சூஸ்
7/1, செங்குந்தா நவீன சந்தை,
மேல்மாடி, கல்வியங்காடு.
(194)

**சிறு குறிஞ்சா இலை தேவை**

தனி இலை 1 kg 50/=
தண்டுடன் இலை 1 kg 25/=
தொடர்புகளுக்கு:
Bio Tec
131/2,பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.: 021 4590907
(186)

**விற்பனைக்கு**

குறுகிய காலம் வீடியோ கடையில் பாவித்த புதிய, பழைய படங்கள் வீடியோ கசற் 400,CD 400 மொத்தமாக மலிவான விலையில் விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0776051360
(196)

# இன்று ஒரு தகவல்

## நிதானம்

நபிகள் நாயகம் அவர்களை பார்ப்பதற்காக நீண்ட தூரத்திலிருந்து சிலர் மதீனாவை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள்.

இருபது ஒட்டகங்கள் மற்றும் பத்துப் பதினைந்து குதிரைகள் அவர்களை சுமந்து வந்து கொண்டிருந்தது.

ஒருவழியாக அவர்கள் மதீனாவுக்கு வந்து சேர்ந்தார்கள். மதீனத்து எல்லையில் பேரீச்சம்பழத் தோட்டங்கள் ... அதைப்பாத்தவுடன் அவர்களுக்கு ஆனந்தம், அந்த நிழல் பட்டவுடன் அவர்களுக்கு ஆனந்தம்.

இன்னும் கொஞ்சநேரத்தில் நபிகள் நாயகத்தைப் பார்க்கப் போகிறோம் என்ற மகிழ்ச்சி.

மதீனத்து தெருக்களில் நுழைந்தவுடன் என்ன செய்தார்கள் தெரியுமா?

ஒட்டகங்களையும் குதிரைகளையும் வேகமாக விரட்ட ஆரம்பித்தார்கள். எல்லாம் ஓடி வந்து மாநபியின் பள்ளி வாசல் முன்வந்து நின்றது.

அவை நிற்பதற்குள் பொத்தென்று கீழே குதித்தார்கள். கூட்டமாக முண்டியடித்துக் கொண்டு உள்ளே ஓடினார்கள்.

அவர்கள் உடுத்திருந்த ஆடையெல்லாம் ஒரே புழுதி. தலை முடியெல்லாம் கலைந்து கிடந்தது. பார்ப்பதற்கு அலங்கோலமாக இருந்தது. இருந்தாலும் அதைப் பற்றியெல்லாம் அவர்கள் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. முதலில் ஓடிப்போய் முகம்மது நபி அவர்களைப் பார்க்க வேண்டும். அதுதான் அவர்களது நோக்கம்.

அதேபோல் ஓடிப்போய் பார்த்தார்கள். கைகுலுக்கி 'முஸாபஹா' செய்து பூரிப்படைந்தார்கள்.

இது ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்கிறது.

அதேசமயம், அவர்களுக்கு தலைவராக வந்த அஷ்ஷபா அவசரப்படவில்லை. நிதானம் தவறவில்லை. மிகவும் அமைதியாக ஒட்டகங்களையும் குதிரைகளையும் கட்டிப்போட்டார். அவை மிகவும் களைப்பாக இருந்தன.

அந்த வாயில்லா ஜீவன்களுக்கு குடிநீர் புகட்டினார். அவற்றுக்கு வேண்டிய புல், தீவனம் எல்லாம் போட்டார். கொண்டுவந்த பொருட்களையெல்லாம் ஒழுங்காக எடுத்து அடுக்கி வைத்தார்.

அதன்பின் அந்தப் பள்ளிவாசலுக்குப் பக்கத்திலிருந்த குளியலறைக்குப் போனார். குளித்து, உடைகள் மாற்றி, இலேசாக நறுமணமும் இட்டுக் கொண்டார்.

தலையைத் துவட்டி சீராக வாரி விட்டார்.

தலை முடியையும் தாடியையும் ஒழுங்குபடுத்தினார்.

அதன்பின் நிதானமாக அண்ணல் நபியின் திருச்சமூகத்துக்குப் போய் சலாம் சொன்னார்.

இவருடைய நிதானம் – கண்ணியம் – மிடுக்கு எல்லாம் நபிகள் நாயகத்திற்கு மிகவும் பிடித்துவிட்டது.

அந்தச் சமயத்தில் நபிகள் நாயகம் சொன்னாராம் :

"உங்களிடம் இரண்டு நல்ல பண்புகள் இருக்கிறது. அதைத்தான் இறைவனும் விரும்புகிறான்.

முதலாவது பண்பு என்னவென்றால் 'ஹில்ம்' – அதாவது பொறுமை, சகிப்புத்தன்மை.

இரண்டாவது 'அனாத்' – அதாவது நிதானமும் கண்ணியமும் என்றாராம்.

எந்த வேலையையும் அவசரப்படாமல் ஆர்ப்பாட்டம் செய்யாமல் பொறுமையாகவும் நிதானமாகவும் செய்து முடிக்க வேண்டும். அதுதான் அண்ணலாருக்குப் பிடிக்கும்.

தேவையில்லாமல் அவசரப்படுவது, வேகமாக செயல்பட முயல்வது இவையிரண்டும் நல்லது செய்யாது.

அமைதி, நிதானம் இவையிரண்டும் இறை நம்பிக்கையாளர்களுக்கு அழகு.

இந்தக் காலத்தில் எல்லாமே அவசரம் தான்.

ஒரு பெரியசாலையால் கார் ஒன்று மிக வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

வேகக் கட்டுப்பாட்டையெல்லாம் மீறி மணிக்கு 200 கி.மீ வேகத்தில் போய்க் கொண்டிருந்தது.

பொலிஸ் ஹெலிகொப்டர் மூலமாக அதைத் துரத்திப் பிடித்தார்கள்.

"ஏன் இவ்வளவு வேகமாக போகிறாய்?" என்று கேட்டார்கள்.

இதற்கு அந்த ஆள் சொன்னான் :

"பிரேக் பெயிலியர் ஆகிவிட்டது. அதனால் ஏதாவது 'அச்சிடென்ற்' நடப்பதற்குள் சீக்கிரமாக... பத்திரமாக வீடு போய்ச் சேர்ந்துவிடலாம் என்று நினைத்தேன். வேறு ஒன்றுமில்லை" என்று நிதானமாக பதில் சொன்னானாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*




வலிகாமம் கிழக்கு - கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவின் ஒளிவிழா நிகழ்வில் இருபாலை கானான் ஜெப ஆலய போதகர் ஈபன் ஏபிரகாம் மங்கல விளக்கேற்றுவதையும், பிரதேச செயலர் கிறிஸ்தோபர் அன்ரன் மோகன்ராஸ், கோப்பாய் பங்குத்தந்தை எவ்.எல்.என் குரூஸ் அடிகளார் ஆகியோர் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

### புதிய கண்டுபிடிப்புப் போட்டியில்

# கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம் சாதனை



(யாழ்ப்பாணம்)

கல்வி அமைச்சு மைக்றோ சொற் நிறுவனத்துடன் இணைந்து தேசிய மட்டத்தில் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மத்தியில் 2009 ஆண்டில் நடத்தப்பட்ட புதிய கண்டுபிடிப்புப் போட்டியில் யா/கோண்டாவில் இராமகிருஷ்ண மகா வித்தியாலயம் தேசிய மட்டத்தில் வெற்றியீட்டியுள்ளது.

மாணவருக்கான போட்டியில் செல்வன் தில்லைநாதன் கௌசிகன் க.பொ.த. உயர்தர கலைப் பிரிவில் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளார். இவருக் கான விருதுகளும், சான்றிதழ்களும் கடந்த மாதம் 14 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வழங் கப்பட்டன.

இதேவேளை இலங்கை சட்ட மன்றக் கல்லூரியில் தேசிய மட்டத்தில் 2009 இல் நடத்தப்பட்ட இயற்கை அனர்த்த முகாமைத் துவத்தில் பாரம்பரிய முறைகளை இனங்காணும் செயற்றிட்ட முன்மொழிவுக்கான போட்டியில் கௌசிகன் தலைமையிலான குழுவினர் மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார். இவர்களுக்கான ரூபா. 15 ஆயிரம் பரிசும் சான்றிதழ் களும் இலங்கை சட்டமன்றக் கல்லூரியில் நடைபெற்ற வருடாந்த விழாவில் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (6)

# வன்னி வலயத்திலுள்ள பாடசாலைகள் இன்று முதல் இயங்கவுள்ளன

(யாழ்ப்பாணம்)

வன்னி வலய ஆசிரியர்களின் இணைப்பை முடிவுறுத்தி நிரந்த பாடசாலைகளில் கடமையேற்க அனுமதிக்கும் பொருட்டு இன்று திங்கட்கிழமை வன்னி வலயங்களிலுள்ள பெரும்பாலான பாடசாலைகள் இயங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதில் மடுவலயத்தில் அனைத்து பாடசாலைகளும், வவுனியா வடக்கு வலயுத்தில் ஓமந்தை கோட்ட 4 பாடசாலைகளும் நெடுங்கேணி கோட்ட 17 பாடசாலைகளும் துணுக்காய் வலயத்தில் துணுக்காய் மாந்தை கிழக்கு கோட்ட பாடசாலைகளும் கிளிநொச்சி வலயத்தில் பூநகரி கோட்டத்தை 23 பாடசாலைகளும் கரைச்சி கோட்ட 5 பாடசாலைகளும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேலும் மேற்குறிப்பிட்ட பாடசாலைகளுக்குரிய அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் இன்று பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் என்றும் இவர்களுக்குரிய தை மாத சம்பளக் கொடுப்பனவு தத்தம் வலயங்களில் வழங்கப்படும் எனவும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா அறிவித்துள்ளார். (6-4-19)

# இராசி பலன்

*04-01-2010*
*(மார்கழி 20 திங்கட்கிழமை)*
*சதுர்த்தி பிற்பகல் 4.57 மணிவரை*
*மகம் பின்னிரவு 2.06 மணிவரை*
*இராகுகாலம் 8.01-9.31 மணிவரை*
*சுபநேரம் 12.31 - 2.01 மணிவரை*
*சங்கடஹர சதுர்த்தி விரதம்*

| | |
|---|---|
| மேடம் | குடும்பக் கவலை, அஜீரண ரோகம், எடுத்த காரியம் தாமதமாகும், தனவிரயம். |
| இடபம் | மனச்சஞ்சலம், சுபசெலவு, நல்ல முயற்சி, போசன சுகம். |
| மிதுனம் | சகோதரர் உதவி, மனோ தைரியம், இஷ்ட சித்தி, பொருள் சேர்க்கை. |
| கடகம் | கடின உழைப்பு, முயற்சி தாமதம், தனவிரயம், ரோக நிலை. |
| சிங்கம் | நல்ல செய்தி, புதிய முயற்சி, தேகநலன், பெரியோர் சந்திப்பு. |
| கன்னி | சோம்பல் நிலை, இடமாற்றம், சயன சுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| துலாம் | நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை, தனசேர்க்கை, கலந்துரையாடல். |
| விருச்சிகம் | முயற்சி கைகூடும், நல்ல வரவேற்பு, போசன சுகம், தேகநலன். |
| தனுசு | உத்தியோக பங்கம், பிரயாணம், குடும்பக் கவலை, முயற்சி தாமதம். |
| மகரம் | வீண்பகை, வாகன பயம், காரிய தாமதம், பிறருக்கு உதவுதல். |
| கும்பம் | எடுத்த காரியம் கைகூடும், மனோதைரியம், நண்பர்கள் சந்திப்பு, தனவருவாய். |
| மீனம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி, பாராட்டு, போசன சுகம். |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | கல்வியங்காடு | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 60 | 60-70 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 500 | 280 |
| தக்காளி | 120 | 140 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 35 | 40 |
| கோவா | 90 | 100 | 90 |
| கரட் | 100 | 120 | 120 |
| பூசணி | 60 | 60 | 50 |
| புடோல் | 120 | 140 | 70 |
| வாழைக்காய் | 50 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 140 | 140 |
| பெரிய வெங்காயம் | 60 | 70 | 70 |
| பாகற்காய் | 200 | 240 | 150 |
| வெண்டிக்காய் | 100 | 100 | 50 |
| கரணைக்கிழங்கு | 25 | 35 | 40 |
| பயிற்றங்காய் | 120 | 140 | 150 |
| லீக்ஸ் | 160 | 140 | 120 |
| பீற்றூட் | -- | 120 | -- |
| கறிமிளகாய் | 300 | -- | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 160 | 150 | 140 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | 120 |
| கீரை - 1 பிடி | -- | 40 | 35 |
| தேசிக்காய் | 160 | 130 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 30 | 35 |



நயினை நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற லகு ஸ்ரீ சக்கர பூஜா நூல் வெளியீட்டு விழாவில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி மகேஸ்வரக் குருக்கள் ஆசியுரை வழங்குவதையும், கிழக்குப் பல்கலைக்கழக சமஸ்கிருத விரிவுரையாளர் ம.பாலகைலாசநாத சர்மா நூல் வெளியீட்டுரை வழங்குவதையும், நல்லைக்குருமணி சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் வாழ்த்துரை வழங்குவதையும், அருகில் பதிப்பாசிரியரான தொழிலதிபர் சேரன்குமார், சர்வதேச இந்து மத குரு பீடாதிபதி, ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் ஆ.தியாகராஜா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

### மீளக்குடியமர்ந்த

## பாடசாலை மாணவர்கள் 15 பேருக்கு துவிச்சக்கர வண்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் நலன்புரி நிலையங்களிலிருந்து மீளக்குடியமர்ந்த குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட பதினைந்து பாடசாலை செல்லும் மாணவர்களுக்கு சொண்ட் நிறுவனத்தால் அன்பளிப்புச் செய்யப்பட்ட புதிய துவிச்சக்கர வண்டிகள் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளன. (ஓ-134)

## தொழில் பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலகத்தினால் கோரப்பட்ட தொழிற்பயிற்சி நெறிக்கான நேர்முகப் பரீட்சை நாளை செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இதில் கலந்துகொள்வோர் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், அடையாள அட்டை, கல்வித் தகமைச் சான்றிதழ், குடும்ப அட்டை, கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட நற் சான்றுப் பத்திரம் ஆகியவற்றை கொண்டு வருமாறு தென்மராட்சி பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (6-4-29)




## கலந்துரையாடல்

(காரைநகர்)

காரைநகரின் எதிர்கால அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு காரைநகர் உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் காரைநகர் உதவி அரச அதிபர் இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தரும், வாழ்நாள் பேராசிரியருமான பொ.பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொண்டு கருத்துரை வழங்குவார்.

காரைநகர் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் நடைபெறும் இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (6-246)

☼☼☼

(அல்வாய்)

டெங்கு காய்ச்சல் பரம்பல் அபாயம் தொடர்பாக வடமராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான அவசரக் கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு புலோலி மெ.மி.த.க பாடசாலை யில் நடைபெறவுள்ளது.

இக் கலந்துரையாடலுக்கு அனைத்து அதிபர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலயக்கல் விப் பணிப்பாளர் வ.செல்வ ராசா அறிவித்துள்ளார். (6-4-19)

## 'மக்கள் மருத்துவன்' சஞ்சிகை வெளியீடும் ஜனாதிபதி செயலருடனான கலந்துரையாடலும்

(யாழ்ப்பாணம்)

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி மாணவர் மன்றத்தின் மக்கள் மருத்துவன் சஞ்சிகையான மூன்றாவது இதழ் வெளியீட்டு நிகழ்வு இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர சபை உறுப்பினர்களும் கல்லூரி சமூகத்தினரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் வெளியீட்டுரையை வைத்திய கலாநிதி கணேஸ் சிறீதரன் வழங்கவுள்ளார்.

தொடர்ந்து ஜனாதிபதியின் கௌரவ செயலாளர் டாக்டர் ஜெயம்பதி டபிள்யூ. திஸநாயக்கவுடன் கல்லூரி அபிவிருத்தி தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் கல்லூரி சார்ந்த நலன்விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு லங்கா சித்த ஆயுள் வேத மருத்துவக் கல்லூரி அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார். (6-4)

## சுவாமி விவேகானந்தரின் 148 ஆவது ஜெயந்திவிழா

(யாழ்ப்பாணம்)


கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியால் நடத்தப்படும் சுவாமி விவேகானந்தரின் 148 ஆவது ஜெயந்தி விழா நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு தாவடியில் உள்ள சமிதி மண்டபத்தில் த.முருகானந்தா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக ஆ.சி.நடராசா கலந்துகொண்டு "ஞாலம் போற்றும் துறவி" எனும் விடயம் பற்றி உரை நிகழ்த்தவுள்ளார்.

தொடர்ந்து ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியின் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் வழங்கும் கலைநிகழ்வுகளும் பரிசில் வழங்கலும் இடம்பெறவுள்ளது.

மேலும் இவ்விழாவை முன்னிட்டு இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் அனுசரணையில் தாவடி, உடுவில் பகுதிகளில் சிரமதானம் மேற்கொள்ளப்படவுள்ளது. (6-4)

## பிரிவுபசார வைபவம்



வலிமேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றி ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் எஸ். கே. சிவலிங்கத்திற்கான பிரிவுபசார வைபவம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வலிமேற்கு பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத் தலைவர் ந.சிறிரஞ்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஓய்வு பெற்ற இக் கிராம உத்தியோகத்தர் 19 வருட கால மாக காரைநகர் மத்தி (ஜே/48) கிராம அலுவலர் பிரிவிலும் இரண்டு வருடங்கள் தொல்புரம் மேற்கு (ஜே/169) கிராம அலுவலர் பிரிவிலும் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (6-4)

## விளையாட்டுக் கழகத்துக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது

(வடமராட்சி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்திற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் என்.கே.சிவாஜிலிங்கத்தால் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான விளையாட்டு உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுக் கழகச் செயலாளர் த.வேணுகானன் தெரிவித்துள்ளார். (7-3)

## அகில இலங்கை சிறுபான்மை தமிழர் மகாசபையை புனரமைக்க நடவடிக்கை

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையை மீண்டும் புனரமைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இது தொடர்பான ஆலோசனைக் கூட்டம் அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் புலம் பெயர்ந்த நாட்டில் வசிக்கும் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் முக்கிய பிரமுகர்கள், கல்விமான்கள் ,பொது அமைப் புக்களின் பிரதிநிதிகள், சமூக சேவையாளர் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்.மாவட்டத்தில் சிறுபான்மை மக்கள் வாழும் இடங்களில் பிரச்சாரக் கூட்டங்களை வைத்து எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் சிறுபான்மைத் தமிழர் மகாசபை சார்பாக வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாகவும் கருத்தரங்குகள் நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (6-134)

## யூனியன் கல்லூரி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறவிருந்த மீள்குடியேற்றம் தொடர்பான நிகழ்வுகள் பிற்போடப்பட்டுள்ளதால் திட்டமிட்டபடி இன்று திங்கட்கிழமை பாடசாலை ஆரம்பிக்கப்படும் என கல்லூரி அதிபர் எஸ். புண்ணியசீலன் தெரிவித்துள்ளார்.எனவே சகல ஆசிரியர்களையும் மாணவர்களையும் இன்றைய தினம் பாடசாலைக்கு சமூகமளிக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ச-14)

### ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் குருஜியின்

## வாழும் கலைப்பயிற்சியின் இலவச அறிமுகவுரை

(யாழ்ப்பாணம்)

தவத்திரு ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜியின் வாழுங்கலை பயிற்சியின் அறிமுகவுரை இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறவுள்ளது.

இதில் சுதர்சன கிரியா எனும் சிறப்பு மூச்சுப் பயிற்சி, பிராணாயாமம், இலகுயோகா, ஞானம், அறிவுரை என்பன உள்ளடக்கியது.

இந்தியாவில் பயிற்சி பெற்று கொழும்பில் இருந்து வருகை தரும் ஆசிரியரினால் வழங்கப்படவுள்ள இப் பயிற்சி நெறி நாளை செவ்வாய்க்கிழமை முதல் எதிர்வரும் 9 ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 6.30 மணிமுதல் 8.30 மணி வரை அல்லது மாலை 5 மணி முதல் 7 மணி வரையும் நடை பெறவுள்ளதாகவும் இதில் அனைவரும் கலந்து பயனடையுமாறும் வாழும் கலை அற நிறுவனத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (6-4)

## நடமாடும் கண் பரிசோதனை முகாம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலய அதிபர், ஆசிரியர்கள், வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், கல்விசாரா ஊழியர்கள் ஆகியோருக்கான நடமாடும் கண்பரிசோதனை முகாம் நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

கண்ணில் நீர் வடிதல், தலைவலி, தூர பார்வை, கிட்டப் பார்வை ஆகிய குறைபாடுடையவர்கள் கணனி மூலம் பரிசோதனை செய்யப்பட்டு மூக்குக் கண்ணாடி வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு.வ. செல்வராசா அறிவித்துள்ளார்.(4-19)

### யாழ்.கல்வி வலய

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலய முன்பள்ளிகளின் சகல ஆசிரியர்களுக்குமான டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை பிற்பகல் 1 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் சகல முன்பள்ளி ஆசிரியர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (6-4)


## வேலையற்ற பட்டதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

இன்று திங்கட்கிழமை வவு னியா செல்வதற்காக மேற் கொள்ளப்பட்ட பயண ஒழுங்கு கள் யாவும் தவிர்க்க முடியாத காரணத்தால் இடை நிறுத்த ப்பட்டுள்ளதாக வேலையற்றபட்ட தாரிகள் சங்க செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)

# நாயக்கர் கலைப்பாணி

94



கீழைக்கோபுரத்தின் தாங்குதளம் கல்லினால் அமைக்கப்பட்டுள்ளது. அதன் மேற்பகுதி செங்கல் வேலைப்பாடாகும். அதன் வாசலில் உள்ள கதவு 35 அடி உயரமானது. கோபுரத்தளங்கள் ஒவ்வொன்றிலும் கூடம், சாலை, பஞ்சரம் என்பன வரிசைக்கிரமமாய் அமைந்துள்ளன. திருவிளையாடற் புராணக் கதைகளை ஆதாரமாகக் கொண்ட கதைச் சிற்பங்கள் தளங்களில் அமைக்கப்பட்டிருந்தன. அவற்றைப் புனராக்கஞ் செய்யும் பொழுது நவீன காலக் . கட்டடப் பொருட்களைப் பயன் படுத்தியுள்ளனர்.

கோபுர வாசலில் இரண்டு சாசனங்கள் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் வாசகங்கள் மேல் வருமாறு அமைந்துள்ளன.

1. *திரிபுவனச் சக்கரவர்த்தி கோதேரின்மை கொண்டான் சுந்தரபாண்டியன் திருக்கோபுரம்*

2. *திரிபுவனச் சக்கரவர்த்தி கோதேரின்மை கொண்டான் அவனி வேந்தராமன் திருக்கோபுரம்.*

*அவனிவேந்தராமன்* என்பது முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியனின் (1251-1268) விருதுப் பெயர்களில் ஒன்றென்பதால் இரு சாசனங்களும் சுந்தரபாண்டியனையே குறிப்பிடுகின்றன என்பது தெளிவாகும்.

கோபுரம் சுந்தரபாண்டியனால் அமைக்கப்பெற்றது என்றும் அதனால் அது அவன் பெயரால் வழங்கியது என்றும் கொள்வதற்கு இச் சாசனங்கள் ஆதாரமாகின்றன. சுவாமி கோயிலுக்குரிய கோபுரம் சக வருடம் 1140 இல் (1218) சுந்தரபாண்டியனால் அமைக்கப்பெற்றது என்ற குறிப்பு திருப்பணி விபரத்தில் உண்டு. சுந்தரபாண்டிய கோபுரம் சுந்தரபாண்டியனால் அமைக்கப்பட்டதென்று ''திருப்பணி மாலை'' கூறும்.

கீழைக் கோபுரத்திற் பாண்டியரின் இலச்சினையாகிய இணைக் கயல் வடிவம் பொறிக்கப்பட்டுள்ளது.

கோபுரம் தொடர்பான திருப்பணி வேலைகள் பன்னிரண்டாம் நூற்றாண்டிலே தொடங்கிவிட்டன என்றும் அது 13ஆம் நூற்றாண்டிலே சடைய வர்மன் சுந்தர பாண்டியனின் காலத்திலே கட்டிமுடிக்கப் பெற் றது என்றும் கொள்வதற்கான சான்றுகள் உள்ளன. முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டி யன் (1216-1230), சடையவர்மன் குலசேகரன் (1236), சடையவர்மன் குலசேகரன் (1190) ஆகியோரின் சாசனங்கள் இரண்டாம் தளத் தில் உள்ளன.


## மேலைக்கோபுரம்

ஒன்பது தளங்களோடு அமைந்துள்ள மேலைக்கோபுரம் 14 ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்டது. ஆதி வீதியிலுள்ள ஒன்பது தளங்களோடு கூடிய மேலைக் கோபுரத்தைப் பராக்கிரம பாண்டியன் அமைப்பித்தான் என்று திருப்பணி விவரத்திலே கூறப்பட்டுள்ளது. *திருப்பணி மாலையும்* அவ்வாறே கூறுகின்றது.

கோபுரத்தின் அதிர்ஷ்டானம் நிலத்திலே புதைந்துவிட்டது. புராணக்கதை விளக்கமான சிற்பங்களும் கடவுட் படிமங்களும் கோபுர தளங்களிலே அமைக்கப்பட்டுள்ளன. அவற்றிலே திருப்பாற் கடலை கடையும் காட்சியும் ரிஷபாரூடரின் கோலமும் மிகுந்த சிறப்புடையவை.

## தெற்குக் கோபுரம்

தெற்குக் கோபுரம் சிராமலை செவ்வந்தி என்பாரின் திருப்பணியான என்று *திருப்பணி விவரம், திருப்பணி மாலை* என்பவற்றிலே சொல்லப்படுகின்றது. அது கி.பி 1478 ஆம் ஆண்டளவிலே கட்டப்பெற் றது.



அது விஜயநகர கலைப் பாணியில் அமைந்தது என்பது வரலாற்றுக் குறிப்புகளாலும் கட்டட வேலைப்பாடுகளாலும் உணரப்படும். தென் கோபுரமான "பணியாரக்கடை கோபுரத்தை பெரிய செவ்வந்திலிங்கம் செட்டி கட்டினார்" என்று *ஸ்ரீ தாள* என்னும் நூலிலே எழுதியுள்ளார்.

தாங்குதளத்தில் நிலைகள் இரண்டும் கருங்கல்லால் அமைக்கப்பட்டவை. மேற்றளங்கள் செங்கல் வேலைப் பாடானவை. கோபு ரத்தின் தோற்றம் உன்னதக் கோலமானது.


பொற்றாமரைக் குளத்துக்கு சமீபமாக அமைந் திருப்பதால் அது மிகுந்த வனப்புடன் விளங்குகின்றது. அதன் அரைத் தூண்களில் அடியில் யாளி வடிவங்கள் விஜயநகர கலைப்பாணி யில் அமைந்துள்ளன.

## வடக்குக் கோபுரம்

ஒன்பது தளங்களைக் கொண்ட வடக்குக் கோபுரத்திலே அண்மைக்காலம் வரை சிகரம் கட்டப்பெறாமையால் அது மொட்டைக் கோபுரம் என்று சொல்லப்படும். 19ஆம் நூற்றாண்டிலே அதன் சிகரம் நாட்டுக்கோட்டைச் செட்டிகளாற் கட்டுவிக்கப்பட்டது. பீடத்திலுள்ள தளங்கள் இரண்டும் கல்லினாற் கட்டப்பெற்றவை. கோபுரத்தின் அமைப்பும் வேலைப்பாடும் தெற்குக் கோபுரத்தின் அம்சங்களை ஒத்திருக்கின்றன.

தேவகோட்டங்களிலே குறுந்தூண்கள் அமைந்துள்ளமை ஒரு சிறப்பம்சமாகும். அதிலுள்ள தூண்களின் கபோதங்களிற் புஷ்ப போதிகைகள் காணப்படுகின்றன. அது 16, 17 ஆம் நூற்றாண்டுகளுக்கு உரிய கலைப் பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளது. கிருஷ்ண வீரப்ப நாயக்கரின் காலத்தில் அது கட்டப்பெற்றது என்பதைத் *திருப்பணி விவரம்* மூலம் அறியமுடிகின்றது.

புது மண்டபத்திற்குக் கிழக்கிலுள்ள இராஜ கோபுரத்தின் தாங்கு தளம் கீழைக் கோபுரத்தில் உள்ளதைக் காட்டிலும் இரு மடங்கு விசாலமானது. அது 200 அடி நீளமும் 120 அடி அகலமுங் .கொண்டது. அதன் நிர்மாண வேலைகள் திருமலை நாயக்கரின் காலத்தில் ஆரம்பித்தன. அதிலே 50 அடிக்கு மேலான உயரமுடைய பிரமாண்டமான தூண்கள் அமைந்திருக்கின்றன. அதிர்ஷ்டானத்திலே அலங்கார வேலைப்பாடுகள் மிகுந்த வனப்புடன் செதுக்கப்பட்டுள்ளன. மாடத் தூண்கள் அளவிற் பெரியவை. அரைத் தூண்களிலே



யாளி உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. திருமலை நாயக்கரதும் அவரது தேவியரதும் பிரதிமைகள் பல அதிலே உரு வமைக்கப்பட்டுள்ளன. மீனாக்ஷியின் பட்டாபிஷேகக் காட்சி சுவரிலே சிற்பமாக வடிக்கப்பட்டுள்ளது.

வெளிக்கோபுரங்களைத் தவிர கோயில் வளாகத்திலே எட்டு உட்கோபுரங்கள் உள்ளன. அவற்றுட் சித்திரக்கோபுரம் ஏழு தளங்களைக் கொண்டுள்ளது. ஏனையவை அதனிலுஞ் சிறியனவாகும். மீனாக்ஷி அம்மன் கோயிலுக்கு முன்னால் அமைந்திருக்கும் சித்திரக் கோபுரம் கி.பி. 1570 ஆம் ஆண்டளவிலே அரியநாத முதலியாரின் மகனாகிய காளத்தி முதலியாரால் கட்டப்பெற்றது. அதன் தளங்கள் பொருத்தமான அளவுப் பிரமாணங்களுடனும் வனப்பு மிக்க கோலத்திலும் அமைக்கப்பட்டுள்ளன.

சுவாமி கோயிலின் முன்னால் அமைந்த நாயக்க கோபுரம் 16 ஆம் நூற்றாண்டிலே கட்டப்பெற்றது. அரசரின் தர்மமாக அச்சுதராயரின் (1529-1542) அடப்பமான ஈஸ்வரப்பாவின் மகனான விஸ்வப்பா என்பவரால் அது கட்டப்பட்ட தென்று சாசனக் குறிப்புண்டு.

அது ஐந்து தளக் கட்டடமாகும். சுவாமி கோயிலுக்கும் அம்மன் கோயிலுக்கும் இடையிலே காணப்ப டும் ஐந்து தளக்கோபுரமான நடுக் கட்டுக் கோபுரமும் 16ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிற் கட்டப் பெற்றதாகும். நடுக்கட்டுக்கோபுரத்தின் கோஷ்டங்களில் அமைந்திருக்கும் நடராஜ வடிவமும் சண்முகரின் படிமமும் மிகவும் அழகானவை.

நாயக்க கோபுரத்திலுள்ள வைரவர், வீரபத்திரர் ஆகியோரின் சிற்பங்களுஞ் சாலச் சிறந்தவை. கி.பி. 1559 ஆம்ஆண்டுக்குச் சமமான சக வருடம் 1481 இல் நடுக்கட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டதென்று திருப்பணி விவரத்திலே எழுதப்பட்டுள்ளது. அது செவ்வந்தி மூர்த்தியால் அமைக்கப்பட்டதாகும்.

மதுரையிலுள்ள கோபுரங்கள் எல்லாவற்றிலும் கடககோபுரமே மிகப் பழமையா னது போலத் தெரிகின்றது. அதன் வேலைப்பாடுகளின் அடிப்படையில் அதனைப் 13, 14ஆம் நூற்றாண்டுகளுக்குரிய கட்டடமாகக் கொள்ள முடிகிறது. அம்மன் கோயிலின் மேற்கு வாசலில் உள்ள அக்கோபுரம் 16ஆம் நூற்றாண்டிலே புனரமைக்கப்பட்டதென்று கொள்வதற்கான காரணம் உண்டு. சுவாமி கோயிலின் மேற்கு வாசலில் அமைந்திருக்கும் பாலக கோபுரம் கடக கோபுரத்தைப் போன்ற அமைப்பாகும். சக வருடம் 1296 (கி.பி.1374)இல் அதனை மல்லப்பன் என்பவர் அமைப்பித்தார் எனத் திருப்பணி விவரத்திலே எழுதப்பட்டுள்ளது.

அதிலுள்ள கூடுகள் பாண்டியர் கலைப் பாணியின் அம்சங்களைக் கொண் டுள்ளன. அதன் பூதகண வரிசையும் கொடுங் கை மேலமைந்துள்ள வியாளவரியும் கடக கோபுரத்திலே உள்ளவற்றைப் போன்றவை. பாலக கோபுரத்தை முன்மாதிரியாகக் கொண்டு நவீன காலத்துக்கோபுரங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன.

சின்ன மொட்டைக் கோபுரம் சுந்தரேஸ்வரர் கோயிலின் வடக்குப் பிரகாரத்தில் அமைந்துள்ளது. நாயக்க கோபுரம், நடுக்கட்டுக் கோபுரம் என்பவற்றை அது பல அம்சங்களில் ஒத்திருக்கின்றது. அது கி.பி. 1560 ஆம் ஆண்டளவிலே செவ்வந்திவேலன் என்பவரால் கட்டப்பெற்றதென்பர். அதன் கட்டட வேலைப்பாடுகள் 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரியவை.

பேராசிரியர் சி.பத்மநாதன்

சந்நிதி கோபுரங்கள் இரண்டும் பழமையானவை. சுவாமி கோயிற் சந்நிதி கோபுரத்திலே 12,13 ஆம் நூற்றாண்டுக்குரிய கலைப் பாணியின் அம்சங்கள் காணப்படுகின்றன.

மீனாக்ஷி அம்மன் கோயிலுக்குரிய சந்நிதி கோபுரம் 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குரிய கலைப்பாணியின் அம்சங்களைக் கொண்டுள்ளது. கோபுர அமைப்பானது பாண்டியப் பேரரசர் காலம் முதலாக நவீன காலம் வரை அடைந்த பரிணாம வளர்ச்சியை ஆராய்ந்து அறிந்துகொள்வதற்கான அம்சங்கள் மதுரையில் உள்ளமை குறிப்பிடற்குரியது. (தொடரும்)

# 2010 புத்தாண்டு பலன்கள்

## இடபம்

(கார்த்திகை 2,3,4 பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம், 1,2 பாதங்கள் வரை)

**ஏப்ரலுக்கு மேல் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும்!**

வரவு அதிகரிக்கும் வழியைப் பற்றியும், வருங்கால முன்னேற்றம் கருதியும் எந்நேரமும் சிந்தித்துக் கொண்டு இருக்கும் இடப ராசி நேயர்களே!

பிறந்திருக்கும் புத்தாண்டு பெருமைகளை நமக்குச் சோக்குமா? நிரந்தரமாக நமக்கு நிம்மதி கிடைக்குமா? என்ற உங்கள் கேள்விகளுக்கு விடைகாணும் விதத்தில் இந்தப் புத்தாண்டு உங்களுக்கு அமையப் போகிறது. உங்களுக்கு இராசிநாதன் சுக்ரன் என்பதால் சுகங்களையும், சந்தோஷசங்களையும் அதிகம் அனுபவிப்பவர்கள் நீங்கள் தான்.

நேரம், காலம் சரியாக அமைந்தால் நிச்சயம் காரியங்கள் கைகூடும். ஈரமனம் பெற்றவர்களும், இரக்க சிந்தனை உள்ளவர்களும் போராட்டத்தைத் தீர்க்க புதிய பாதை அமைத்துக் கொடுப்பர். யாரோடு நீங்கள் பழகினாலும் அவர்களால் உங்களை மறக்க முடியாது. கவலையில்லாத மனிதர் என்று கூட வர்ணிக்கலாம்.

ஏதேனும் பிரச்சினைகள் என்றால் ஐந்து நிமிடம் அலசிப் பார்ப்பீர்கள். அதற்குப் பிறகு சராசரி நிலைக்கு வந்து விடுவீர்கள். எண்ணங்களை உடனுக்குடன் செயலாக்க வேண்டும்; எந்த நாளும் சிரித்த முகத்தோடு காட்சியளிக்க வேண்டும் என்று சொல்லும் நீங்கள் கவர்ச்சியான பேச்சிற்கு சொந்தக்காரர்களாக விளங்குவீர்கள்.

உங்கள் பிரச்சினையை விட, உங்களைச் சார்ந்தவர்களின் பிரச்சினைக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பவர்களின் பட்டியலில் முதலிடம் பெறுபவர்களும் நீங்கள் தான். அதனால் தான் பொதுவாழ்வில் பொறுப்பும் கிடைக்கிறது ; புகழும் கிடைக்கிறது . மே மாதத்திற்கு மேல் மேதினி போற்றும் வாழ்க்கை அமையப் போகிறது. இந்த ஆண்டானது உங்களுக்கு ஆதரவு கூடும் ஆண்டு என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

உங்கள் சுய ஜாதகத்தில் உள்ள கட்டங்களையும், புத்தாண்டில் உள்ள கிரக நிலையின் கட்டத்தையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

அவை இணைந்து செயல்பட்டால் துணிந்து காரியங்களைச் செய்யலாம். இல்லையேல், பணிந்து வணங்கி, பரிகாரங்கள் செய்து, யோகபலம் பெற்ற நாளில் ஸ்தலங்களுக்குச் சென்று வந்தால் தேக நலனும் சிறப்பாக இருக்கும் ; செல்வ வளமும் பெருகும்.

பெயரியல் முறையில், எண் கணித அடிப்படையில், சுக்ரன் சுய ஜாதகத்தில் இருக்கும் பாதசார அடிப்படையில் அம்சநிலை பார்த்து, அதற்குரிய எண் ஆதிக்கத்தில் உங்கள் பெயரையும் அமைத்துக் கொண்டால், எதிர்காலம் இனிமையாக இருக்கும்.

குருவிற்குரிய ஆண்டாகக் கருதப்படும் இந்த 2010 குருவின் பார்வை உங்கள் இராசிக்கு எந்தெந்த இடங்களில் பதிகிறதோ அந்தந்த இடங்களில் எல்லாம் நல்ல மாற்றங்கள் வந்து சேரும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**01-01-2010 முதல் 30-04-2010 வரை**

இக்காலத்தில் உங்களுக்கு இனிய மாற்றங்களும், எதிர்பாராத மாற்றங்களும் கூட வந்து சேரலாம் 10 இல் அல்லவா குரு சஞ்சரிக்கிறார்? எனவே, பதவியில் உயர்வும் வரலாம் ; ஒரு சிலருக்கு இலாகா மாற்றங்களும் உருவாகலாம். குருவின் பார்வை பலம் கை கொடுப்பதால், பயப்பட வேண்டிய தேவை இல்லை.

அது மட்டுமல்லாமல் வருடத் தொடக்கத்தில் சுக்ரன், சூரியன், புதன் மூன்றும் இணைந்து சகாய ஸ்தானாதிபதியின் நேரடிப் பார்வை பதிவதால் புத சுக்ர யோகமும், புத - ஆதித்ய யோகமும் உருவாகிறது.

எனவே, வருமானம் திருப்தி தரும். வளர்ச்சி கூடுவதற்கான அறிகுறிகள் தோன்றும். திருமணம் முதலான சுபச் சடங்குகளைச் செய்து முடிக்க முன் வருவீர்கள். யாருடைய பணமாவது உங்கள் கைகளில் புரண்டு கொண்டே இருக்கும். இல்லம் தேடி நல்ல செய்திகள் வந்து சேரும்.

ஆனால் இக்காலத்தில் இரண்டு மாபெரும் கிரகங்கள் வலிமை இழக்கின்றன. ஒன்று 7,12 -க்கு அதிபதியான செவ்வாய். மற்றொன்று 9,10 க்கு அதிபதியான சனி. இதில் செவ்வாய் நீசம் பெறுவது யோகம் தான். விரயாதிபதி நீசம் பெற்றால் வேண்டும் பொழுதெல்லாம் பணம் வந்து கொண்டே இருக்கும்.

ஆனால், சனி வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. சொத்துக்களால் பிரச்சினையும், சொந்தங்களால் பகையும் ஏற்படாமல் இருக்க சொந்தங்களை அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கினாலும், பகை கிரகத்தின் தெசா புத்தி நடைபெற்றவர்கள் மாற்றம் செய்து கொள்ளாமல் இருப்பது நல்லது. உங்கள் கூட்டு முயற்சிகளில் குழப்பங்கள் ஏற்படாமல் இருக்கவும், கொடுக்கல் - வாங்கல்கள் ஒழுங்காகவும் வாரம் தோறும் ஈஸ்வரன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். சனீஸ்வரன் வழிபாடும், சர்வேஸ்வரன் வழிபாடும் சகல யோகங்களையும் வழங்கும்.

**01-05-2010 முதல் 31-08-2010 வரை**

இக்காலத்தில் நன்மைகள் அதிகம் உங்களை நாடி வரும் காலமாகும். இலாப ஸ்தானத்தில் குருவின் சஞ்சாரம் மே 5 ஆம் திகதி முதல் ஏற்படுகிறது. மாத தொடக்கத்தில் குரு வக்ரத்தில் இருக்கிறார். அஷ்டமாதிபதி வக்ரம் பெறுவது ஒரு வழிக்கு நன்மை தான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜ யோகம்' என்பதற்கிணங்க, எதிர்பாராத சில திருப்பங்கள் ஏற்படப் போகின்றன. இப்படி நடக்குமா? என்று நீங்கள் ஆச்சரியப்படும் விதத்தில் சில தகவல்கள் உங்களுக்கு வந்து சேரும்.

மீனத்தில் சஞ்சரிக்கும் குரு உங்கள் ராசியைப் பொறுத்த வரை அஷ்டம இலாபாதிபதியாகி இலாபஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது செலவிற்கேற்ற வரவுகளைக் கொடுத்துக் கொண்டே இருப்பார். நாளை நடைபெறப் போகும் ஒரு செயலுக்கு பணம் இல்லையே என்று கவலைப்பட வேண்டாம். முதல் நாள் இரவே பணம் வந்து சேர்ந்து விடும். எனவே சுபகாரியங்கள் அனைத்தையும் செய்ய உகந்த நேரமிது.

மே - 5 ஆம் திகதி மீனத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 3,5,7 ஆகிய இடங்களைப் பார்ப்பதால் சகோதர ஸ்தானம் புனிதமடைகிறது. எனவே உடன் பிறப்புகள் ஒத்து வருவர். விலகிச் சென்ற சகோதரர்கள் விரும்பி வந்து சேருவர். பாகப் பிரிவினைக்கு தடை போட்டவர்கள் இப்பொழுது தங்களுக்கு பணம் தேவை என்று சொல்லி உங்கள் கருத்துக்களுக்கு ஒத்து வருவர்.

பிள்ளைகளால் வந்த தொல்லை அகலும். பிரச்சினைகளைக் கொடுத்து வந்த பிள்ளைகள் இனி உங்களுக்கு ஆதரவாக இருப்பர். பூர்வீக சொத்துக்களில் இருந்து கொண்டு 'காலி பண்ண மாட்டோம்' என்று கலகத்தை உண்டாக்கி யவர்கள் தானாகவே விலகிச் செல்வர்.

வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும். வரன்கள் வாயில் தேடி வரும். கல்யாணம் முடியவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது சந்தோஷமான தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர். பழைய வாகனங்களைப் புதுப்பிக்கும் எண்ணம் மேலோங்கும்.

அடகு வைத்த நகைகள் மீட்கப் பெற்று குடும்ப உறுப்பினர்கள் அணிந்து மகிழ வாய்ப்பு கிட்டும் மனக்கசப்புகளை மாற்றும் குருவை யோக பலம் பெற்ற நாளில் வழிபட்டால் யோகங்கள் மேலும் வந்து சேரும்.

**01-09-2010 முதல் 31-12-2010 வரை**

இக்காலத்தில் குரு வக்ர கதியில் இயங்குகிறார். மற்ற கிரகங்களைப் பொறுத்த வரை மகிழ்ச்சி தரும் விதத்திலேயே உலா வருகின்றன.

சனி வக்ர நிவர்த்தியாகி விட்டதால் தொழில் வளர்ச்சி மேலோங்கும். தொகை வந்து கொண்டே இருக்கும். மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர். உடல் நலம் சீராகி உற்சாகப்படுத்தும். தந்தை வழி உறவினர்கள் தக்க சமயத்தில் கை கொடுத்து உதவுவர். வருடக் கடைசி வசந்தமாக அமையும்.

இக்காலத்தில் கன்னி ராசியில் செவ்வாயும், சனியும் சேர்ந்து உலா வருகிறார்கள். புத்திர ஸ்தானத்தில் இவ்விரண்டு கிரகங்களும் ஒன்று சேருவதால் பிள்ளைகள் வழியில் கூடுதல் கண்காணிப்பு தேவைப்படும். உங்களைக் கேட்காமலேயே அவர்கள் ஒரு சில காரியங்களில் ஈடுபடுவார்கள். அன்பும், அரவணைப்பும் காட்டி உங்கள் பக்கம் அவர்களை ஈர்த்துக் கொள்வது நல்லது. சொத்துக்களை விற்கும் சூழ்நிலை உருவாகலாம். விற்றால் புதிய சொத்துக்களை வாங்கி விடுவது நல்லது.

எந்த நாளையும் இனிய நாளாக மாற்றுகிற ஆற்றல் நந்தி வழிபாட்டிற்கு உண்டு.

**சிவல்புரி சிங்காரம்**

நந்தீஸ்வரரை வழிபட்டு நிகரில்லாத வாழ்வை அமைத்துக் கொள்ளுங்கள்.

ரிஷப இராசியில் பிறந்த பெண்களுக்கு வருடத்தொடக்கம் சந்திர பலம் பெற்றிருப்பதால் வாய்ப்புகள் வாயில் தேடி வரும். கனவுகள் நனவாகும். மே மாதத்திற்கு மேல் குருவின் பார்வை பதிவதால் உடன் பிறப்புகள் ஒத்துவருவர்.

விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். பணப்புழக்கம் அதிகரிக்கும். ஆகஸ்ட் மாதத்திற்கு மேல் சொத்துக்கள் வாங்குவதற்கான அறிகுறிகள் தோன்றும். சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் சுய ஜாதக ரீதியாக வழிபாட்டை தேர்ந்தெடுத்துக் கொள்வதோடு, சர்ப்ப சாந்தியும் செய்து கொண்டால் சந்தோஷம் வந்து சேரும் (தொடரும்)

---

## புலிகளுக்குச் சொந்தமான
# மேலும் சில கப்பல்களும், விமானங்களும் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளன

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பிற்குச் சொந்தமான மேலும் சில கப்பல்கள் மற்றும் விமானங்கள் இன்னும் சில தினங்களில் இலங்கைக்கு கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்பிரகாரம் புலிகளுக்குச் சொந்தமான இரண்டு கப்பல்களும், சில இலகு ரக விமானங்களும் விரைவில் கொண்டு வரப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

குறித்த கப்பல்கள் எந்தக் கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ளதென்பது தொடர்பான தகவல்கள் பாதுகாப்பு காரணங்களுக்காக வெளியிடப்படவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

மேலும் அண்மையில் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட புலிகளின் கப்பல் காலி துறைமுகத்தில் மக்கள் பார்வைக்காக காட்சிப் படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-6)

---

# கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஆங்கிலத்தில் பூர்த்தி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் கடவுச்சீட்டு பெற்றுக்கொள்ள விண்ணப்பிப்போர் ஆங்கில மொழி மூலம் விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

கடவுச் சீட்டில் நபர்களது பெயர்கள் சரியான முறையில் அச்சிடும் நோக்கிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் பி.பீ. அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும் கடவுச்சீட்டுக்கான விண்ணப்பப்படிவங்கள் மூன்று மொழிகளிலும் அச்சிடப்பட்டுள்ளதாகவும் அதற்கமைய தமிழ் மற்றும் சிங்கள மொழிகளில் பூர்த்தி செய்யப்படும் விண்ணப்பங்களும் தற்போதைக்கு ஏற்றுக் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

---

## திஸாநாயக்கவிற்கு
# பிரதமர் பதவி வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்படவில்லை
## மைத்திரிபால சிறிசேன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு பிரதமர் பதவி வழங்கப்படும் என ஒரு போதும் உறுதியளிக்கப்படவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

எஸ்.பி.திஸாநாயக்கவுடன் தாமே முதலில் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், அவ்வாறான பதவிகளை எதிர்பார்த்து அவர் ஆளும் கட்சியில் இணையவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் ஆளும் கட்சியில் குடும்ப அரசியல் ஆதிக்கம் நிலவி வருவதாக தெரிவிக்கப்படும் கருத்துக்களில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

லக்பிம வார இதழுக்கு அளித்த விசேட செவ்வியின் போது அவர் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.



மேலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்வரும் தேர்தலில் பாரிய வெற்றியீட்டுவார் எனவும் 75 வீதமான வாக்குகளைப் பெற்றுக் கொள்வார் எனவும் கடந்த தேர்தலில் வாக்குறுதி அளிக்கப்பட்ட மஹிந்த சிந்தனைக் கொள்கைகளில் கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஊடகங்கள் அடக்கு முறைக்கு உட்படுத்தப்படுவதாக வெளியிடப்படும் செய்திகளில் எவ்வித உண்மையுமில்லை என்றும் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்கில் சில சக்திகள் போலியான குற்றச் சாட்டுக்களை சுமத்தி வருவதாகவும் அவர் இந்தக் செவ்வியில் குறிப்பிட்டுள்ளார். (2-6)

# 55வது அகவையில் ஓய்வுபெறும் இலங்கை வங்கி வல்வெட்டித்துறைக் கிளை உத்தியோகத்தர்

# திரு.பாலகிருஸ்ணன் லோகநாதன் அவர்களின்

# சேவைநலன் பாராட்டும் பிறந்தநாள் வாழ்த்துகளும்

## வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளரின் வாழ்த்துரை

கரவெட்டியைச் சேர்ந்த திரு. பா.லோகநாதன் அவர்கள் இலங்கை வங்கியின் வரலாற்றில் 29 வருட காலமாக சேவை யாற்றி இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்கிறார். இலங்கையின் வட பகுதியில் பல இன்னல்களுக்கு மத்தியில் இரவு பகல் எனக் கருதாது சேவையாற்றிய ஒருவர்.

என்னுடன் பல சந்தர்ப்பங்களில் பணியாற்றிய அவர் எனது விஷேட வேண்டுகோளுக்கிணங்க வல்வெட்டித்துறை இலங்கை வங்கிக் கிளையில் மிகச் சிறப்புடன் பணியாற்றி, இலங்கையில் உள்ள விரிவாக்கற் கிளைகளை விட வல்வெட்டித்துறைக்கிளையை மிகக்குறுகிய காலத்தில் தரம் உயர்த்தும் நிலைக்குக் கொண்டு வருவதற்கு முன்னுதாரணமாக திகழ்ந்தவர்.

அவர் இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்வதையிட்டு மனம் சஞ்சலம் அடைந்தாலும் அவரது ஓய்வுக்காலம் சிறப்பானதாகவும் மகிழ்ச் சிகரமானதாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திப்பதோடு அவரது பிறந்தநாள் வாழ்த்துக்களையும் எனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு.ந.சிவரட்ணம்,
உதவிப் பொதுமுகாமையாளர், வடபிராந்தியம்.

## வடமாகாண பிரதேச முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

திரு.லோகநாதன் அவர்கள் கிட்டத்தட்ட 3 தசாப்த கால சேவை யின் பின் இலங்கை வங்கியில் இருந்து ஓய்வுபெறுகிறார். அந்தப் பாரிய இடைவெளியை நிரப்புவது சுலபமல்ல! எப்போதும் இன் முகத்துடன் எவரையும் பணிவாக வரவேற்கும் பண்பாடு, உதவி செய்யும் மனப்பாங்கு, மனிதநேயம், எல்லாவற்றையும் விட வங்கி அலுவல்கள் சம்பந்தமான தெளிந்த அறிவும் எதையும் செய்து கொடுக்கும் ஆற்றலும் இவரில் நான் கண்ட போற்றத்தக்க அம்சங்கள். இதன்காரணமாகவே ''அவரைத் தேடியும்'', ''அவருக்காகவும்'' என வங்கிக்கு வந்து எம்முடன் இணைந்து கொண்ட வாடிக்கையாளர்கள் ஏராளம்! ஏராளம்!!

அவர் தனது வாழ்க்கைக்கு ஒரு வருமானத்தைத் தேடி வங்கியில் இணைந்திருந்தாலும், அந்த வங்கியை வாழ வைத்த உண்மை,நேர்மை மிக்க உழைப்பாளி. அவர் கடமைபுரிந்த அத்தனை கிளைகளையும் செழிக்க வைத்தார் என்பதுதான் மறுக்க முடியாத உண்மையாகும். அவரது சேவை மனப்பான் மைக்கும் விசுவாசமான உழைப்புக்கும் என்றும் தலைவணங் குகின்றேன். அவருடன் ஒன்றாகக் கடமையாற்றக் கிடைத்த காலங்கள் மறக்கமுடியாதவையும் தொழில் திறமையும் தந்தன. அவரது ஓய்வுக்காலம் குடும்பத்தினருடன் சீருடனும் சிறப்புடனும் அமையும் என்பது நிச்சயம். வாழ்க வளமுடன்.

வீ.சி.சிவநாதன்,
பிரதேச முகாமையாளர்.


## இலங்கை வங்கி - பருத்தித்துறைக்கிளை முகாமையாளரின் வாழ்த்துரை

எம்முடன் பருத்தித்துறைக் கிளையிலும் தொடர்ந்து எமது வல்வெட்டித்துறை கிளையிலும் பணியாற்றி அத்துடன் இலங்கை வங்கியில் 29 வருட சேவையினைப் பூர்த்தி செய்த திரு.பா.லோக நாதன் அவர்கள் 04.01.2010 இன்று சேவையினின்று ஓய்வு பெறுகிறார்.

அவர் எமது கிளையிலே பணியாற்றிய வேளையில் வங்கி யின் சகல செயற்பாடுகளிலும் முக்கிய பங்கு வகித்துள்ளார். எமது வாடிக்கையாளர்களுடன் நல்ல உறவினை எப்போதுமே பேணுபவர்.நாம் எடுக்கின்ற எந்த ஒரு கடினமான முயற்சியா னாலும் "அது செய்யலாம்" என எப்போதும் சாதகமான நம்பிக்கை அளிப்பது மட்டுமன்றி அவற்றை வெற்றிகரமாக நிறைவேற்றியும் விடுவார்.அதுமட்டுமன்றி எமது வல்வெட்டித்துறை விரிவாக்கற் கிளையின் உருவாக்கத்திலும் அவரின் பங்கு முக்கியமானது.

அவர் இளைப்பாறுவதால் ஏற்படும் இழப்பு எமக்கு ஈடு செய்ய முடியாதது எனினும் அவரின் ஓய்வூதிய வாழ்க்கை குடும்பத் தாருடன் மகிழ்ச்சிகரமாகவும் சிறப்பானதாகவும் அமைய எமது நல்வாழ்த்துக்கள் என்றென்றும் உரித்தாகுக.

திருமதி.சுமங்கலா பிரபாகரன்
முகாமையாளர், இலங்கை வங்கி,பருத்தித்துறை.




சேவை ஆரம்பம்:- 1981.08.03 -2010.01.04

சேவை செய்த வங்கிக் கிளைகள்:-

- பருத்தித்துறை
- யாழ்ப்பாணம் 02ம் கிளை
- நெல்லியடி
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- வல்வெட்டித்துறை

## இலங்கைவங்கி வல்வெட்டித்துறை கிளை முகாமையாளரின் வாழ்த்துரை

திரு.பா.லோகநாதன் அவர்கள் தனது 55வது பிறந்தநாளில் 29 வருட சேவையைப்பூர்த்தி செய்து 04.01.2010 உடன் ஓய்வுபெறும் இந்நாள் பொன்னான நாளாகும். வல்வெட்டித்துறைக் கிளையினைப் பொறுப்பெடுத்த நாள் முதல் இன்றுவரை வாடிக்கையாளரை அன்போடு வரவேற்று வாடிக்கையாளர் சேவைதனை வாஞ்சையுடன் நிறைவேற்றி, வங்கியின் சகஊழியர்களின் நன்மதிப்பையும் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பையும் பெற்றது மட்டுமல்லாது சமூக சேவைகளிலும் தனது பணியினை திறம்படச் செய்து பாராட்டுக்களைப் பெற்று வங்கிக்கு பெருமை தேடித்தந்த பெருமகன்.

தனது ஓய்வுக் காலங்களில் சுகமாகவும் நீண்ட ஆயுளுடனும் வாழவேண்டுமென இறைவனைப் பிரார்த்திப்பதோடு இனிய பிறந்த தின வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு.சி.ஸ்ரீகாந்தன்,
முகாமையாளர், இலங்கை வங்கி,வல்வெட்டித்துறை.

## இலங்கை வங்கி நெல்லியடிக்கிளை முகாமையாளரின் வாழ்த்துரை

அன்பும் பண்பும் அகத்தில் கொண்டவர்
ஆற்றல் கொண்டே கடமை செய்தவர்
இலங்கை வங்கியில் பாதுகாப்பு அதிகாரியானார்
ஈடிணை அற்ற சேவையை ஈர்த்தவர்
உண்மை பேசும் உயர்ந்த உள்ளம்
ஊரும் உலகும் இவரை வாழ்த்தும்
எல்லோர்க்கும் உதவிடும் உத்தம சீலன்
ஏற்றிய சேவையில் இளைப்பாறிடும் நாள்
ஐம்பத்தைந்து அகவை கண்டே இன்று
ஒழுக்கமாகக் கடமை ஒழுங்காய்ச் செய்தே
ஓய்வு பெறும் இந்த நாளினிலே
ஔவை மொழியால் நாமும் வாழ்த்துகிறோம்!

க. சகாதேவன்,
முகாமையாளர், இலங்கை வங்கி,நெல்லியடி.

## இலங்கை வங்கி வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

29 வருடங்கள் இலங்கை வங்கியில் இன்முகத்துடன் இடை யுறாது சேவை செய்து இளைப்பாறும் எமது நண்பன் பா.லோகநாதன் எதிர்காலத்தில் இன்பமாக, மிகுதி வாழ்க்கை யில் இன்புற்றிருக்க இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

திரு. சி.ஜெயேந்திரா
செயற்பாட்டு முகாமையாளர், வடபிராந்தியம்.

## யாழ். அதிமேற்தர கிளை பிரதான முகாமையாளரின் வாழ்த்துச் செய்தி

நண்பர் லோகநாதன் இலங்கை வங்கியில் ஊழியராக இணைந்து சேவையில் வெள்ளிவிழாக் கண்டவர். தனக்கு ஒதுக் கப்பட்ட வேலைகளில் மட்டும் கவனத்தை செலுத்தாது வங்கி யின் அனைத்து வேலைகளிலும் மிகவும் செயலூக்கத்துடன் செயற்பட்டு முகாமைத்துவத்தினதும் வாடிக்கையாளரினதும் நன்மதிப்பினையும் அன்பினையும் பெற்றுக்கொண்டவர்.

மிகுந்த நெருக்கடியான காலங்களிலும் அர்ப்பணிப்பு மிக்க சேவையாற்றி வங்கியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த இவருடன் பல்வேறுபட்ட காலத்திலும் இணைந்து கடமையாற்றக் கிடைத்த சந்தர்ப்பங்கள் மிகவும் இனிமையானதாகும்.

இன்றுடன் ஓய்வுபெற்றுச் செல்லும் அவரின் ஓய்வுக் காலம் சிறப்பானதாகவும் நிம்மதியானதாகவும் அமைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அவருக்கு எனது பிறந்த நாள் நல்வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

K.P.ஆனந்தநடேசன்,
பிரதான முகாமையாளர்,
அதி மேற்தரக் கிளை,இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

## வடமாகாண பாதுகாப்பு அதிகாரியின் வாழ்த்துரை

04.01.2010 அன்று சேவையிலிருந்து ஓய்வு பெறும் இலங்கைவங்கி உத்தியோகத்தர் திரு. பால கிருஷ்ணன் லோகநாதன் அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

இலங்கை வங்கியின் எழுபதாண்டு வளர்ச்சியில்
இருபத்தெட்டு வருடங்கள் இணைந்திருந்த பெருமையுடன்
காலத்தின் தேவையால் ஓய்வினை நாடிய
கரவெட்டி மைந்தனே வாழ்க பல்லாண்டு !
பண்புடன் தொழிலில் இணைந்த பயணம்
பருத்தித்துறை கிளையில் இனிதே தொடங்க
இரண்டாம் கிளை, நெல்லியடி, சுன்னாகம்
இடர்நிறை கிளிநொச்சி, சாவகச்சேரி கடந்து
வல்வெட்டித்துறையையும் மனமுவந்தேற்று
வங்கிக்கென உழைத்து வளம் சேர்த்தவர்
கருத்தினில் நிறைந்து மனந்தனில் நிலைத்திட்ட
கடமை, கண்ணியம் கொண்ட நற்சேவையை
நன்றியுடன் அதிகாரியாய் நயந்து பாராட்டி
நலமான வாழ்விற்கு இறையருள் வேண்டி
விடைதருகின்றோம் வாழ்க நீடூழி!

வாழ்த்துபவர்,
திரு. கி. சிவராசா,
வடமாகாண பாதுகாப்பு அதிகாரி,
இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்.

(C-4113)

# போக்குவரத்து சீரின்மையால் கிளிநொச்சியில் மீளக்குடியமர்ந்த மக்கள் பெரும் அவதி

(கொழும்பு)

கிளிநொச்சி மாவட்டத்தில் மீள்குடியமர்த் தப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள் போக்கு வரத்துச் சீரின்மையால், தமது அத்தியா வசியத் தேவைகளை நிறைவு செய்வதற்குப் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் ஒரு சில பேருந்துகள் இந்தப்பகுதிகளில் சேவையில் ஈடுபடத் தரப்பட்டுள்ள போதிலும் பாதைத் தடைகள் காரணமாக நீண்டதூரம் பயணம் செய்வதே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டியுள்ளதாகவும் குறிப் பாக மருத்துவம், பொருள்கொள்வனவு போன் றவற்றுக்காக இந்த மக்கள் பெரும் சிரமங் களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

குறிப்பாக அக்கராயன் அம்பலப் பெரு மாள் சந்தி, முழங்காவில், ஜெயபரம் போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் கிளிநொச் சிக்கு வருவதற்கான பிரதான வீதிகள் அனுமதிக்கப்படாமையால் துணுக்காய், மல்லாவி ,மாங்குளம் சென்று கண்டி வீதி வழியாக கிளிநொச்சிக்கு செல்ல வேண்டியுள் ளது.

இந்த நெடும்பயணத்தினால் நேர விரய மும் சிரமங்களும் ஏற்படுவதாக இந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

தமது அன்றாட கடமைகளையும் தேவை களையும் இலகுவாக நிறைவேற்றிக் கொள்வ தற்கான போக்குவரத்து ஏற்பாடுகளை அரசாங்கம் செய்துதரவேண்டும் என்று இந்த மக்கள்கோரிக்கை விடுத்துள்ள னர். (2-6)

# நாட்டை சீர்குலைக்கும் சதி முயற்சிகள் விரைவில் அம்பலமாகும் - அரசாங்கம்

(கொழும்பு)


நாட்டை சீர்குலைப்பதற்கு மேற்கொள்ளப் படும் முயற்சிகள் தொடர்பில் விரைவில் அம்பலப்படுத்தப்படும் என அரசாங்கம் தெரி வித்துள்ளது.

இதன்படி தமிழீழ விடுதலைப் புலிக ளுக்கு ஆதரவாகச் செயற்பட்டு நாட்டை சீர்குலைக்க முயற்சிகளை மேற்கொண்ட சக்திகளே தற்போதைய சதித் திட்டங்களின் பின்னணியிலும் இயங்கிவருவதாக அரசாங் கப் பாதுகாப்புப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் இவ்வாறான போலியான பிரச்சாரங்களை மேற்கொண்டு பயங்கரவாதிகளுக்கு சிலர் ஆதரவளித்து வருவதாகவும் மேலும் எதிர்க்கட்சிகளுடன் தொடர்பினைப் பேணி சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் போலியான பிரசா ரங்களை முன்னெடுத்து வருவதுடன் தேர் தல் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் மிகைப்படுத்தப்பட்ட தகவல்கள் வெளியிடப் பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள் ளார்.

எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஆதரவாளர் களே இவ்வாறு நாட்டை சீர்குலைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2-6)

# என்னை தூக்கிலேற்ற சதி பாக். அதிபர் சர்தாரி புகார்



(இஸ்லாமாபாத்)

விஷமிகள் சிலரும் ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை இல்லாதவர்களும் என்னை பதவியில் இருந்து நீக்க முற்படுகின்றனர் என பாகிஸ்தான் அதிபர் ஆசிப் அலி சர்தாரி புகார் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் பலுசிஸ்தான் நகரில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் கூறியதாவது,

பலுசிஸ்தான் மாகாண மக்களின் உரிமைக்காக சில சலுகைத் திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. அவற்றை முழுமையாக அம்பலப்படுத்த வேண்டியது அவசியம்: இதுபோன்ற சலுகைத் திட்டங்கள் அறிவிப்பதை விஷமிகள் சிலர் விரும்பவில்லை. அவர்கள் என்னைப் பதவியில் இருந்து நீக்க முற்படுகின்றனர். அவர்களின் தீய எண்ணங்களை நான் முறியடிப்பேன்.

உலக அளவில் பொருளாதார மந்த நிலைமை காணப்பட்டாலும், பயங்கரவாதத்திற்கு எதிராக நாடு பெரிய அளவில் போரிட்டாலும் பொருளாதார ரீதியாக முன்னேற்றம் கண்டுள்ளது.

அரசியல் சட்டத்திற்கு விரோதமான வகையில் என்னை பதவியில் இருந்து நீக்கினால், அது பாகிஸ்தானின் ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி விடும். பாகிஸ்தானுக்கு எதிரான சக்திகளின் கையை ஓங்கச் செய்து விடும். அப்படிப்பட்ட ஒன்று நடக்கும் என, நான் நினைக்கவில்லை. இவ்வாறு சர்தாரி கூறினார். (6)

# விளையாட்டு மைதான குண்டு வெடிப்பு ; பலியானோர் எண்ணிக்கை 95 ஆக உயர்வு



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் வட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டுமைதானத்தில் வெடிபொருட்கள் நிரப்பிய வாகனத்தை மோதி வெடிக்கச் செய்த தற்கொலைப் படைத் தாக்குதலில் பலியானோர் எண்ணிக்கை 95 ஆக உயர்ந்துள்ளது.

இது குறித்து பாகிஸ்தான் அதிகாரிகள் தரப்பில் கூறியதாவது, பாகிஸ்தானில் ஷாஹஷன் கொல் பகுதியில் அமைந்துள்ள விளையாட்டு மைதானத்தில் உள்ளூரைச் சேர்ந்த இரண்டு அணியினர் கலந்து கொண்ட கைப்பந்து போட்டி கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதை ஏராளமான மக்கள் பார்த்துக் கொண்டிருந்தனர். அப்போது 300 கிலோ வெடிபொருட்கள் நிரப்பப்பட்ட வாகனத்தை மைதானத்திற்குள் ஓட்டி வந்த ஒருவர், அதை வெடிக்கச் செய்தார்.

இந்த தற்கொலைப் படை தாக்குதலால் அருகில் இருந்த 20 க்கும் மேற்பட்ட வீடுகள் இடிந்து விழுந்துள்ளன. பொலிஸார் மற்றும் அவசர சேவை பிரிவு அதிகாரிகள், இடிபாடுகளை அகற்றி மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இச் சம்பவத்தில் பலியானோர் எண்ணிக்கை 95 ஆக அதிகரித்துள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர். சிலரின் நிலைமை மிகவும் மோசமாகவுள்ளது.. காயமடைந்தவர்கள், லக்கி மார்வாட், பன்னு மற்றும் பெஷாவரில் உள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினார்.

குண்டு வெடிப்பு சம்பவத்தால், வீடுகளை இழந்த பலரும், இரவு முழுவதும் கடுங்குளிரில் திறந்த வெளியில் தங்கினர். இச்சம்பவத்திற்கு இதுவரை, எந்த பயங்கரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.

ஆனால் ஷா ஹசன்கொல் பகுதியில் இருந்து தலிபான்களை வெளியேற்றும், அரசின் முயற்சியை முறியடிக்கவும், அதற்குப் பழிக்கு பழிவாங்கவே இவ்வாறு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர். (2-6)

# அமைதியை ஏற்படுத்த கொரியா முடிவு

(பீஜிங்)

அமெரிக்காவுடன் மோதல் போக்கை கைவிடுவது என்று தீர்மானித்து இருப்பதாக வட கொரியா அறிவித்துள்ளது.

அதோடு தென்கொரியாவுடன் உள்ள உறவை மேம்படுத்திக் கொள்ளப் போவதாகவும், கொரியா பிரதேசத்தை அணு ஆயுதமற்ற மண்டலமாக்கப் போவதாகவும் அது அறிவித்துள்ளது.

இது தொடர்பாக வடகொரியாவின் அதிகார பூர்வமான செய்தி நிறுவனம், தனது புத்தாண்டு தலையங்கத்தில் கொரிய தீபகற்பத்தில் இருந்து அணு ஆயுதங்களை அகற்றுவதற்கு பேச்சுவார்த்தை நடத்துவோம் என்றும் அதோடு கொரிய தீபகற்பத்தில் அமைதியை ஏற்படுத்துவோம் என்றும் 2010 இல் கொரியாவை ஒன்றிணைந்த நாடாக மாற்றுவதற்கான அத்தியாயத்தை தொடங்குவோம் என்றும் குறிப்பிட்டப்பட்டுள்ளது. (2-6)

# தீவிரவாதிகள் முகாம் மீது கொலம்பியாவில் குண்டுவீச்சு

(பொகோடா)

கொலம்பியாவில் அரசுக்கு எதிராக புரட்சிகர ஆயுதப்படை என்ற தீவிரவாத அமைப்பு செயல்பட்டு வருகிறது. இவர்கள் கொரில்லா தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் புத்தாண்டு தினத்தன்று தெற்கு மேடாவில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது அந்நாட்டு விமானப்படை குண்டு வீசி அதிரடி தாக்குதல் நடத்தியது. விஸ்டா ஹெர்மோசா, பியர்டோ நிகோ ஆகிய இடங்களில் உள்ள 2 முகாம்களில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் தீவிரவாதிகள் 22 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 3 பேர் தீவிரவாத அமைப்பின் தலைவர்கள். அவர்கள் மேலும் தரைவழியாக நடந்த தாக்குதலின் போது 8 தீவிரவாதிகள் உயிருடன் பிடிபட்டனர். இவர்களில் 5 பேர் காயத்துடன் சிக்கியுள்ளனர்.

இந்த தகவலை இராணுவ அதிகாரி ஜெனரல் ஜாவீர் புளோரஸ் தெரிவித்துள்ளார். கடந்த 10 நாட்களுக்கு முன்பு ஆளுநர் லூயிஸ் பிரான்சிஸ்கோ குவல்லர் தீவிரவாதிகளால் கடத்தி கொல்லப்பட்டார்.

இதைத் தொடர்ந்து தீவிரவாதிகள் மீது இத்தாக்குதல் நடத்தப்பட்டது என இராணுவ அமைச்சர் கபிரியேல் சில்வா தெரிவித்துள்ளார். மேலும் புத்தாண்டு தினத்தன்று தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஒரு இராணுவ வீரரும், 14 வயது சிறுமியும் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் கூறியுள்ளார். (2-6)

# இங்கிலாந்து நாட்டின் மேலும் ஒரு கப்பல் கடத்தல்

## சோமாலிய கொள்ளையர் அட்டூழியம்

(லண்டன்)

சோமாலியா கடற்கொள்ளையர்கள் தங்கள் பகுதிக்கு வரும் கப்பல்களை கடத்தி பணம் பறித்து வருகின்றனர். இவர்களின் அட்டூழியம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு இங்கிலாந்தின் இரசாயன பொருட்கள் ஏற்றி வந்த செயின்ட் ஜேம்ஸ்பார்க் என்ற கப்பலை சோமாலியா கடற்கொள்ளையர்கள் கடத்தி சென்றனர்.

இந்த நிலையில் இங்கிலாந்தின் மேலும் ஒரு சரக்கு கப்பலை கடத்தினர். இக்கப்பல் சிங்கப்பூரில் இருந்து சவூதி அரேபியாவில் உள்ள ஜெட்டா நகருக்கு கார்களை ஏற்றி சென்றுள்ளது.

அதில் 25 ஊழியர்கள் இருந்தனர். இவர்கள் அனைவரும் பல்கேரியா நாட்டை சேர்ந்தவர்கள். இக்கப்பல் 13 ஆயிரம் தொன் எடை கொண்டது. சோமாலியா நாட்டு கடல் எல்லையில் இக்கப்பல் கடத்தப்பட்டுள்ளது.

கடத்தப்பட்ட இக்கப்பலை மீட்க கொள்ளையர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. இந்த தகவலை பல்கேரியாவின் வெளியுறவுத்துறை மந்திரி தெரிவித்துள்ளார். (2-6)

# பெண்களை அழவைப்பதில் ஆண்களுக்கு முதலிடம்

உலகம் முழுவதும் பெண்களுக்கு தெரிந்த விடயம் தான். இருந்தாலும் இது அதிகாரபூர்வ அறிவிப்பு. ஆம், பெண்கள் அழுவதற்கான காரணங்களில் முதலிட வகிப்பது ஆண்களே.

லண்டனில் கண் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றின் சார்பில் 2, 000 ஆண், பெண்களிடம் (அழுகை வரும் அளவுக்கு) ஆய்வு நடத்தப்பட்டது. அதில் தங்களை அழ விடுவதில் ஆண்கள் முதலிடம் வகிப்பதாக 4இல் 1பெண் தெரிவித்தார். அதிலும், ஒருவர் கூட தனது அப்பா, மகனை காரணமாக கூறவில்லை.

ஆய்வில் பங்கேற்ற அனைத்துப் பெண்களின் ஏகோபித்த குற்றச்சாட்டு...கணவன் அல்லது காதலன் மீதுதான். மனைவியோ, காதலியோ... அழவிட்டுப் பார்ப்பதில் ஆணுக்கு தனி ஆர்வம் இருப்பதாக வெடித்தனர் பெண்கள்.

ஆய்வின் படி, மனைவி, காதலி மட்டுமன்றி தாயைக் கூட அழவிடும் ஆண்கள் 63 சதவீதம் என்று தெரியவந்தது. இப்படிச் செய்யும் ஆண்கள் தப்பி விட முடியுமா என்ன? அவர்கள் அலுவலகத்தில் மேலதிகாரி பேசும் போதும், வேலையைச் சுமத்தும்போதும் அழுகின்றனராம்.

இங்கிலாந்து பெண்களில் 32 சதவீதத்தினரும், ஆண்கள் 22 சதவீதத்தினரும் வேலையில் மன அழுத்தம், பிரச்சினையால் கண்ணீர் விட்டுக் கதறுகின்றனர். கடந்த 6 மாதங்களில் ஒருமுறையாவது அழுததாக ஆய்வில் பங்கேற்ற பலர் தெரிவித்துள்ளனர்.

எனினும், அலுவலகப் பிரச்சினைகள், டென்ஷனால் கண்ணீர் விட்டு அழும் ஆண்கள் குறைவே. மற்றப்படி மனதுக்குள் அழுதாலும் , பெண்களால் என்ன பிரச்சினை வந்தாலும் மனதுக்குள் கூட அழுவதில்லை. வீறாப்புடன் எதிர்கொள்கின்றனர். மாறாக, பெண்களை டென்ஷனாக்கி அழ விடுகன்றனர் என்கிறார் ஆய்வு நடத்திய டாக்டர் சாரா ப்ரூவர். அழுவது சோகமானதுதான் என்றாலும், கண்ணீர் விடுவது கண்களுக்கு நல்லது என்கிறார் அவர். (2-6)

# நீண்டநேரம் விழித்திருக்கும் இளைஞர், யுவதிகள் கடும் மன அழுத்தத்திற்கு உள்ளாகின்றனர்

## ஆய்வில் தகவல்

நீண்ட நேரம் விழித்திருக்கும் பழக்கத்தை உடைய இளைஞர், யுவதிகள் கடும் மன அழுத்தங்களினால் அல்லலுறக் கூடிய சாத்தியம் இருப்பதாக அண்மைய மருத்துவ ஆய்வுகள் சுட்டிக் காட்டியுள்ளன.

குறித்த நேரத்தில் உறங்குவதன் மூலம் மன அழுத்தம் மற்றும் தற்கொலை முயற்சி குறித்த எண்ணங்களிலிருந்து விடுபட முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

12 வயது முதல் 18 வயது வரையிலான 15 ஆயிரத்து 500 இளைஞர், யுவதிகளிடம் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இரவு பத்து மணிக்கு முன்னதாக படுக்கைக்கு செல்வோரை விடவும், நள்ளிரவு வரை விழித்திருப்போருக்கு அதிகளவு மன உளைச்சல் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

ஐந்து மணித்தியாலங்களுக்கு குறைவாக உறங்குவோர் அதிகளவான பாதிப்புக்களை எதிர்நோக்கக் கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்தில் சிறுவர்கள் உள்ளிட்ட 80 ஆயிரம் பேர் மொத்தமாக மன உளைச்சலினால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

நியூயோர்க்கின் கொலம்பியா பல்கலைக் கழகத்தினால் 1990 ஆம் ஆண்டு முதல் நடத்தப்பட்ட ஆய்வுகளின் மூலம் இந்த முடிவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

குறைந்தளவு நேரத்தை உறக்கத்திற்காக செலவிடும் பெண்கள் மத்தியில் அதிகளவு தற்கொலை உணர்வு தூண்டப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

பிள்ளைகள் சரியான முறையில் உறங்குகின்றார்கள் என்பது குறித்து பெற்றோர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (6)

# இலங்கை அகதிகளுக்கு இலவச ரி.வி.

திருவண்ணாமலையில் உள்ள இலங்கைத் தமிழர்களுக்கு இலவச கலர் ரி.வி யை உணவு அமைச்சர் எ.வ. வேலு வழங்கியுள்ளார். திருவண்ணாமலையில் உள்ள அடி அண்ணாமலை இலங்கைத் தமிழர் முகாமில் இலவச வண்ணத் தொலைக்காட்சி வழங்கும் விழா நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு 236 இலங்கைத் தமிழர்களுக்கு தொலைக்காட்சி வழங்கி பேசிய உணவு அமைச்சர் இலங்கைத் தமிழர்களுக்கு இலவச ரி.வி. வழங்கும் விழா நடைபெறுகிறது என்றால் இதற்குக் காரணம் தலைவர் கருணாநிதி தான். முதல்வர் உத்தரவின் பேரில் நாங்கள் எல்லாம் முகாம்களில் நேரடியாகச் சென்று குறை கேட்டு அதனை முதல்வரிடம் கொடுத்தோம் என்றார். (2-6)

# தமிழக அரசியல் விளையாட்டுக்கு இலங்கைத் தமிழரின் உயிர்கள் பணயமா?

**தா. பாண்டியன்**



இலங்கையில் நடந்து முடிபுக்கு வந்துவிட்டதாகக் கூறப்படும் போர் இரண்டு நாடுகளுக்கிடையில் நடந்த போர் அல்ல முழுக்குடியுரிமை பெற்ற தமிழ்மொழி பேசும் மக்களுக்கு எதிராக பல நாட்டுப்படை, போர்க்கருவிகள், அரசியல், நிதியுதவியுடன், அரசு அதிகாரத்தை கையில் வைத்துள்ள இலங்கை அரசு நடத்திய கொடூரமான போர் என்பதை - மீண்டும் நினைவுறுத்தும் அவசியம் எழுந்துள்ளது.

2009 மே மாதத்தில் தமிழ்ப் போராளிகளை முற்றாக அழித்து ஒழித்துவிட்டதாக இலங்கை அரசு அறிவித்தது. அதன் மகிழ்ச்சிக்காக விழாவையும் கொண்டாடிக் கொண்டது.

இந்திய அரசும் இதைப் பாராட்டி போரினால் ஏற்பட்ட சேதங்களை ஈடுசெய்து கொள்ள நிதியுதவி செய்வதாக அறிவித்தது. தொடர்ந்தும் பல்வேறு உதவிகளைச் செய்து வருகிறது. இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் சித்திரவதைக் கூடங்களில் சிக்குண்டு கிடக்கிறார்கள்.

இந்தக் காலத்தில் தான், தமிழக முதல்வர் கருணாநிதி நம் மௌனம் யாருக்குத் தெரியப் போகிறது என்ற தலைப்பிட்டு, கட்டுரையை எழுதி வெளியிட்டிருந்தார்.

அதில் 'நான் யார் மீதும் குற்றம், குறை சொல்வதற்காக இதையெல்லாம் எழுதவில்லை' என்று எழுதியுள்ளார். நானும் அவரிடம் குற்றம் காணவோ, அவர் மீது குறை கூறவோ இதை இங்கு குறிப்பிடவில்லை. ஆனாலும் இதனை ஆராய்ந்து கவனிக்க வேண்டிய அவசியம் நமக்கு எழுந்துள்ளது.

தமிழர்களின் உயர்வுக்காகப் பாடுபட வேண்டியவர்கள் தங்கள் உயிரை அற்ப ஆயுளில் முடித்துக் கொண்டு போய்விட்டார்களே, என்ற ஆதங்கத்தில் தான் எழுதுகிறேன். 'வாழ வேண்டிய ஆயிரக் கணக்கான இளந்தளிர்கள் வாடி வதங்கி விட்டார்களே என்ற வேதனையில் எழுதுகிறேன்' என்று முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.


நம்முடைய பலத்தையும், மாற்றார் பலத்தையும் துல்லியமாகக் கணிக்காத காரணத்தால், நம்முடைய தமிழ் மக்கள் எத்தனை பேர் மாற்றாரின் தாக்குதலுக்கு ஆளாகித் தங்கள் உயிரை இழக்க நேரிட்டது? ரணில் கூறியிருப்பதைக் கூர்ந்து, விடுதலைப் புலிகள் போர்த் தந்திரத்தை எதிர்காலக் கணிப்போடு கடைப்பிடிக்காதது தான் காரணம் என்பதைப் புரிந்து கொள்ள முடியும் என்றும் கருணாநிதி எழுதியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மட்டும் நடந்த போராக மட்டும் கருணாநிதி இதைக் கூறுகிறார். இந்தியப் பேரரசும் இலங்கைப் போரில் பங்கெடுத்தது.

இந்த உண்மையை யாராலும் மறைக்க முடியுமா? தமிழக முதல்வர் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைக்காக 1956 முதல் ஈழத் தந்தை செல்வாவின் குரலோடு இணைந்து போராடியதையும் பதிவு செய்து, அன்று முதல் இன்றுவரை தனது கட்சி நடத்திய பேராட்டங்கள், சட்ட மன்றப் பதவிகளைத் துறந்தது, இருமுறை ஆட்சியை இழந்தது, தி.மு.க திரட்டிய நிதி, அது மதிக்கப்படாதது, மதுரையில் பழ. நெடுமாறனால் கூடப்பட்ட டெசோ மாநாடு, இந்தியா திரும்பிய அமைதிப்படையை வரவேற்க மறுத்தது என நீண்ட பட்டியலையும் வெளியிட்டுள்ளார்.

ஜனநாயக ரீதியாகக் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு வாய்ப்பு வாசற்படி வந்த போது கூட அதை எட்டி உதைத்து விட்ட தவறான காரியத்தையும் சுட்டிக் காட்டியுள்ளார். இதற்கு ரணில் விக்கிரமசிங்க தந்த பேட்டியையும் ஆதாரம் காட்டியுள்ளார்.

இதற்குப் பின் இவர் குறிப்பிட்டுச் சொல்வதுதான் மிகவும் முக்கியமானதாகும். என்னையும், தம்பி மாறனையும் 1989 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி, அன்றைய பிரதமர் ராஜீவ் காந்தி



டில்லிக்கு அழைத்து - விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பற்றியும், ஈழப்பிரச்சினை குறித்தும், இரண்டு நாட்கள் உரையாடி - அது பற்றிய விபரங்களை சுமார் இரண்டு அல்லது மூன்று மணி நேரம் தமிழ்நாடு மாளிகையில் வெளியுறவுத்துறை இணை அமைச்சர் நட்வர்சிங் மூலமாக எங்களுக்குத் தெரிவித்து - நீங்களும், மாறனும், வைகோவும் இலங்கை சென்று கொழும்பிலோ அல்லது உங்களுக்கு விருப்பமான இடத்திலோ முகாமிட்டு, பிரபாகரனுடன் இந்தப் பிரச்சினை குறித்து விரிவாகப் பேசுங்கள். எத்தனை நாள் வேண்டுமானாலும் அதற்காக நேரம் ஒதுக்கிக் கொள்ளுங்கள். இலங்கையில் நீங்கள் அவர்களைச் சந்திக்கவோ, அல்லது அவர்கள் நீங்கள் தங்கியிருக்கும் இடத்துக்கு வந்து சந்திக்கவோ தேவையான ஏற்பாடுகளை இங்கிருந்து செய்து தருகிறேன்.

அதிக பட்சம் அவர்களது கோரிக்கை என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளை நிறைவேற்ற நான் தயாராக இருக்கின்றேன் என்று கூறி உறுதியளித்த அந்த இளந்தலைவர் ராஜீவ் காந்தி, இந்திய மண்ணில் அதுவும் தமிழ் மண்ணிலேயே கொலையுண்டார் என்பது ஒரு மாபெரும் சோகச் சம்பவம். இதனால் ஈழ விடுதலைப் போராட்டத்தீயில் தண்ணீர் விட்டு அணைத்தது போல் ஆயிற்று என்றும் எழுதியுள்ளார்.

அந்தப் படுகொலைக்குப் பின்னர் பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைவித்தால் சங்காரம் நிஜம் என்று சங்கே முழங்கு என பொங்கியெழுந்த ஆதரவு வெள்ளம்' குறைந்தது என்பதும் உண்மைதான்.

நம்முடைய கேள்வி என்னவென்றால் இன்று தமிழக முதல்வர் தெரிவித்துள்ள இந்த முக்கியத் தகவல்கள், இதற்கு முன்னர் இவரால், தமிழக மக்களுக்குத் தெரிவிக்கப்பட்டதா என்பதுதான். பிரதமர் ராஜீவ் காந்தி, கருணாநிதியுடனும் முரசொலி மாறனுடனும் டில்லியில் பேசியது 1989 ஆம் ஆண்டில் கொலையுண்டது. 1991 மே 21 ஆம் நாளன்று கொல்லப்பட்ட போது இவர் முன்னாள் பிரதமர். காங்கிரஸ் கட்சியின் தலைவர் மட்டும்தான்.

1989 க்கும் 1991, மே மாதத்துக்கும் இடையிலான காலத்தில் ராஜீவ் காந்தி கேட்டுக் கொண்டபடி, கருணாநிதி பிரபாகரனைச் சந்தித்தாரா? ராஜீவ் காந்தி உறுதியளித்த உதவி பற்றி பிரபாகரனுக்குக் கூறப்பட்டதா? இந்தியப் பேரரசு உதவிக்கரம் நீட்டியதை பிரபாகரன் உதறித் தள்ளினாரா? தமிழ்நாட்டு மக்களுக்கு உண்மைச் செய்திகளைக் கூறி விளக்கம் தர வேண்டியது அவசியம் கருணாநிதிக்கு இருக்கிறது.


ஏனெனில், 1989 பெப்ரவரியில் டில்லியில் பிரதமர் ராஜீவ் காந்தி, முதல்வர் கருணாநிதியை அழைத்துப் பேசியபோது உடனிருந்தவர் முரசொலிமாறன் மட்டுமே. உறுதிமொழி தந்த ராஜீவ் காந்தியும் இப்போது இல்லை. உடனிருந்து கேட்ட மாறனும் இல்லை. எனவே, தமிழ் நாட்டு மக்களுக்கு உண்மையைக் கூற, ஒரேஒருவர் மட்டும் தான் உள்ளார். அவர்தான் கருணாநிதி ராஜீவ்காந்தி, காங்கிரஸ் கட்சித் தலைவர்களாக இருந்த பெரியவர் மூப்பனாரிடமோ, வாழப்பாடி ராமமூர்த்தியிடமோ இந்தப் பணியை ஒப்படைக்காமல், கருணாநிதியை அழைத்துச் சொன்னது ஏன்? இவர் கூறினால் தான் பிரபாகரனும், போராளிகளும் கேட்பார்கள் என்ற நம்பிக்கையில் தான் இந்தப் பணி நிறைவேற்றப்பட்டதா? கிடைத்த பதில் ராஜீவ் காந்திக்குத் தெரிவிக்கப்பட்டதா? இவை எல்லாம் இதில் தொடரும் கேள்விகள். 1989 முதல் 1991 மே வரை இந்தச் செய்தியைத் தமிழ் மக்களுக்கு ஏன் தெரிவிக்காமல், அதன் பிறகும் 2009 வரை இது குறித்து மௌனமாக இருந்து இன்று முரசொலியில் கடிதம் ஏன் எழுத வேண்டும்? ராஜீவ் காந்தி கருணாநிதியிடம் தந்த வாக்குறுதி, பிரபாகரனை எட்டியதாகவும் தெரியவில்லை.

பிரபாகரன், ராஜீவ் காந்தி தந்த வாக்குறுதியை நம்பவும் இல்லை. ஏற்கவும் இல்லை. இதில் வேறு சந்தேகம் கலைஞருக்கு இருக்கிறது என்றால், 1991இல் அமைந்த தி.மு.க. ஆதரவு வி.பி.சிங் அரசிடம் அதைக் கூறி, ராஜீவ் காந்திக்குப் பாதுகாப்பு ஏற்பாட்டை இவர் செய்திருக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. ஆனால் ராஜீவ் காந்தி படுகொலை தான் நடந்தது. இன்னொரு முக்கிய அரசியல் விளக்கத்தையும் தர வேண்டுகிறேன். 1956 முதல் தந்தை செல்வாவின் குரலோடு சேர்ந்து முழங்கத் தொடங்கிய அந்த இனச்சிக்கலை 2009 வரை தீர்க்கப்படவே இல்லை. இதற்கு யார் காரணம். விடுதலைப்புலிகள் இயக்கம் தொடங்கப்படுவதற்கு முன்பே இலங்கைத் தமிழ் மக்கள் அகதிகளாகி, புலம்பெயர்ந்து ஓடுவது தொடங்கிவிட்டது.

இந்திய அரசு, தொடக்க காலத்தில், இலங்கைத் தமிழர்களுக்கு இடம் தந்து உதவியது. இலங்கை அரசைக் கண்டித்தது. தீர்வு காண வற்புறுத்தியது. 1956ஆம் ஆண்டிலேயே கருணாநிதி தி.மு.க. வின் முன்னணித் தலைவர்களில் ஒருவர். அவர்தான் இன்று ஆட்சிக்கும் தலைவர். கட்சிக்கும் தலைவர். பா.ஜ.க. வுடனும் தி.மு.க. கூட்டாட்சி நடத்தியது. காங்கிரசுடனும் கூட்டாட்சி நடத்துகிறது. கடந்த 15 ஆண்டுகளாக மத்திய கூட்டாட்சியில் பங்கேற்று வருகிறது. தி.மு.க. மத்திய ஆட்சியில் பங்கு பெறாமல் இருந்தபோது, காங்கிரஸ் ஆட்சி, இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவு நிலையை எடுத்தது. ஆனால், தி.மு.க. மத்திய மந்திரி சபையில் சேர்ந்த பின்னர், மத்திய் காங்கிரஸ் ஆட்சி இலங்கை அரசுக்கு ஆதரவு நிலையையும், போராளிகளை ஒழிக்க ஆயுத உதவி செய்வதும் ஏன்? இந்தக் கொள்கை நிலைமாற்றத்துக்குக் காரணம் என்ன?

விடுதலைப்புலிகள் தந்த ஆலோசனைகளையும், உதவிகளையும் நிராகரித்தனர் எனக் குறை சொல்லப்படுகிறது. ஆனால், தி.மு.க. பங்கேற்றுள்ள மத்திய அரசு, தமிழ் நாட்டிலுள்ள அத்தனை கட்சிகளும் முதலமைச்சர் தலைமையில் கூடி நிறைவேற்றிய தீர்மானம், சட்டசபைத் தீர்மானம். பிரதமரை நேரில் சந்தித்துத் தந்த வேண்டுகோள் ஆகியவை பயனற்று குப்பைக் கூடை காகிதமாகிவிட்டதே ஏன்? அது பற்றிய சுய விமர்சனம் இல்லாமல், போராளிகள் தவறாக மதிப்பிட்டுச் செயல்பட்டதை மட்டும் பட்டியலிட்டுள்ளது ஏன்?

1990 முதல் 1996 வரை நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தாலும், 1991 மே மாதம் 21ஆம் நாளன்று ராஜீவ் காந்தி வெடிகுண்டுக்கு ஆளான போது அதே



இடத்தில் நானும் இரத்தம் சிந்தியவன். நானறிந்த வரையில், இலங்கைத் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள இன்னல்களுக்கு எல்லாம் பல காரணங்கள் உண்டு. தமிழகத்தின் அரசியல் கட்சிகள் குழப்பியதும் காரணமாகும்.

ஆனால் இலங்கைத் தமிழர்கள் தன்னம்பிக்கையை இன்னமும் இழக்கவில்லை. இலங்கைத் தமிழரின் அரசியல் மனித உரிமைகளை மீட்டு நிலைநாட்டப்பட வேண்டுமெனில், இலங்கை ஒரு ஜனநாயக நாடு அல்ல என்பதை நாம் உணர வேண்டும்.

இலங்கைத் தமிழர்களே அவர்களது எதிர்காலத்தைத் தீர்மானிக்க வேண்டும். இறுதி அரசியல் தீர்வு இலங்கைத் தமிழர்களால் ஏற்கப்படத்தக்கதாக அமைய வேண்டும். இதைத் தவிர்த்து தமிழக அரசியலுக்காக இலங்கைத் தமிழர்களின் உயிரைப் பணயம் வைத்து விளையாடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இறுதியில் அறம் வெல்லும், நம்புவோம்.






நுணாவில் அமெரிக்கன் இலங்கை மிஷன் திருச்சபையின் ஒளிவிழா நிகழ்வில் சபைக்குரு பி.ஜே.சூரியகுமார், இராணுவ அதிகாரி லெப்.கேணல் கே.எம்.ஆர். அபேயசிங்க ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், கலைநிகழ்வையும், விருந்தினர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## மஹிந்தவுக்கு ஆதரவு வழங்கும் முகமாக தேர்தல் பிரசாரங்களில் இலங்கையின் தூதுவர்கள்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கும்முகமாக 14 இராஜதந்திரிகள் கொழும்பின் ஐந்து நட்சத்திர ஹோட்டலில் தங்கியிருந்து செயற்பட்டுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய, இத்தாலியின் தூதுவர் ஹேமந்த வர்ணகுலசூரிய, டொரன்டோவின் தூதரக செயலாளர் நாயகம் பந்துல ஜெயசேகர, ஈரானின் தூதுவர் எம் எம் சுஹைர், கொரியாவின் தூதுவர் அசித பெரேரா, பிலிப்பைன்ஸின் தூதுவர் என்.பேனாட் குரே, மியன்மாரின் தூதுவர் நியூட்டன் குணரட்ன ஆகியோரே இந்தத் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களில் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர்ஜாலிய விக்கிரமசூரிய, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் இவர்கள் யாவரும், ஜனாதிபதியின் சகோதரர் பசில் ராஜபக்ஷவின் கீழ் தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் அலுவலகம், அலரி மாளிகையுடன் இணைந்ததாக அண்மையில் கட்டப்பட்ட கட்டடத்தின் மேல் மாடியில் அமைந்துள்ளது.

மேலும் இந்த அலுவலகத்தின் பணிகளுக்கான செலவுகள் மற்றும் தூதுவர்களின் செலவுகள் அனைத்தும் வெளிநாட்டு அமைச்சின் கீழேயே மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-6)

## விசேட அதிரடிப்படையினர் யாவரும் மஹிந்தவுக்கே வாக்களிக்க வேண்டும்

## துண்டுப்பிரசுரங்கள் விநியோகம்

(கொழும்பு)

இலங்கையின் விசேட அதிரடிப்படை அலுவலகத்தின் மூலம் கடந்த டிசம்பர் 9 ஆம் திகதியன்று துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. அதில் விசேட அதிரடிப் படையினர் யாவரும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வாக்களிக்க வேண்டும் என கேட்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அதிரடிப்படையினர் கட்டளை அதிகாரியினால், டிசம்பர் 11ஆம் திகதியன்று, அனைத்து விடேச அதிரடிப்படை முகாம்களுக்கும் இதன் பிரதிகளை அனுப்புமாறு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்மூலம் ஏன் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதில் ஜனாதிபதியே படையினருக்கு மரியாதையை ஏற்படுத்திக் கொடுத்தார் என்ற காரணம் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதியே ஆசியப் பிராந்தியத்தில் பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கையின் மூலம் நாட்டின் இறை மையை பாதுகாத்துள்ளார் என்ற காரணமும் கூறப்பட்டுள்ளது.

இறுதியாக. அந்த துண்டுப்பிரசுரத்தில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களே நீங்களே இன்றும் நாளையும் எமது ஜனாதிபதி என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த தமது கையொப்பத்துடன் இது வெளியிடப்படவில்லை என விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி சரத் சந்திர மறுத்துள்ளதாக தெரிகிறது.

இதேவேளை, இதுதொடர்பில் ஏற்கனவே பொதுவேட்பாளர் சரத் பொன்சேகா பொலிஸ்மா அதிபரிடம் முறையிட்டுள்ளார் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. (2-6)

## தேர்தல் சட்டங்களை மீறும் அரச அதிகாரிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்படுகிறது

### ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத்



(கொழும்பு)

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை மீறி, தேர்தல் பிரச்சாரங்களை முன்னெடுத்து வரும் அரசாங்க உயரதிகாரிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டுவருவதாக ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்படும் நபர்கள் தொடர்பிலான அறிக்கை விரைவில் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் சார்பில் சில உயர் அரசாங்க அதிகாரிகள் பிரச்சாரங்களை முன்னெடுத்து வருவதாகவும் இராணுவம், காவல்துறை உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் இவ்வாறு சட்டவிரோதமான முறையில் ஆதரவளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு நிறுவனங்கள் சட்டத்தின் 32 ஆம் சரத்தின் பிரகாரம் அரசாங்க அதிகாரி கள் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபடுவது தண்ட னைக்குரிய குற்றமாகும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (2)

## மு.சிவலிங்கம் அரசாங்கத்துடன் இணைவு

(கொழும்பு)

ஜனநாயக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க செயலாளராகவும், சிரேஷ்ட மலையக அரசியல்வாதியாகவும் செயல்பட்டு வந்த மு.சிவலிங்கம் முன்னணியுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக மேற்படி முன்னணியிலிருந்து விலகி அரசாங்கத்துடன் இணைந்துள்ளதாகவும் தான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து பிரசாரத்தில் ஈடுபடவுள்ளதாகவும் கொழும்பிலிருந்து வெளியாகும் வார இதழ் ஒன் றுக்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அண்மையில் அலரி மாளிகையில் சந்தித்தவுடன் அவரது பணிப்பிற்கமைய பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறியதாவது, நான் ஜனநாயக மக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படலாம் என்ற எதிர்பார்ப்புடனே மேற்படி முன்னணியுடன் இணைந்தேன்.

ஆனால் மேற்படி முன்னணியி மலையக தமிழ் மக்களின் அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதை நான் அம் முன்னணியுடன் இணைந்த குறிப்பிட்ட காலத்தில் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு வழங்கும் முக்கியத்துவமள விற்கு மலையகத் தமிழ் மக்களின் அரசியலுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. இவ்வாறு முக்கியத்துவம் வழங்கப்படாவிடின் அது தமிழ் மக்களின் முழுமையான அரசியலாக முடியாது என்று தெரிவித்துள்ளார். (2-6)

## 13ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ் தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படும்

### ஜனாதிபதி



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கத்தின் மூலம் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி யின் புதிய தேர்தல் வாக்குறுதிகளில் 13 ஆவது திருத்தச் சட்ட அமுலாக்கம் தொடர்பில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வருட நடுப்பகுதியில் வடக்கு மாகாண சபைத் தேர்தல்கள் நடத்தப்படுமென ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

இதன் பிரகாரம் வடக்கு மாகாண சபை இயங்க ஆரம்பித்த தன் பின்னர் நடவடிக்கைகளை உன்னிப்பாக அவதானிக் கப்பட்டு திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என்றும் 13 ஆவது திருத்தச் சட்டத்தின் மூலம் அதிகாரப் பரவலாக்கல்களை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் கிழக்கு மாகாணத்தில் இந்த முயற்சி சீராக இயங்கி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் மாகாண சபைமுறையை அமுல் படுத்திய முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தன கூட வடக்கில் மாகாண சபை முறைமையை சரியானமுறையில் நடைமுறைப்படுத்தவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (2-6)

## செய்மதிப் படச்சான்றுகளுடன் இலங்கை அரசுக்கெதிரான போர்க்குற்றங்கள் முன்வைக்கப்படவுள்ளன

இலங்கை அரசாங்கம் போர்க்குற்றத்தில் ஈடுபட்டதற்கான செய்மதிப் படங்களுடனான சான்றுகள் அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட குழுவினால் சர்வதேச நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட தமிழர் படுகொலைக்கு எதிரான அமைப்பு இந்த முனைப்பில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிகிறது. எதிர்வரும் 14,15ஆம் திகதிகளில் டப்ளினில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றம் கூடவுள்ளது.

இதன்போது கடந்த வருடம் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில் வன்னியில் வைத்தியசாலைகளின் மீது நடத்தப்பட்ட எறிகணைத் தாக்குதல்கள் தொடர்பிலான நான்கு செய்மதிப் படங்களை அமெரிக்க குழு சமர்ப்பிக்கவுள்ளதாகத் தெரிகிறது.

1907 ஆம் ஆண்டின் ஹேக் உடன்படிக்கை, 1948 ஆம் ஆண்டின் ஜெனிவா உடன்படிக்கை என்பவற்றில் வைத்தியசாலைகள் போன்ற மருத்துவ நிலையங்கள் மீதான தாக்குதல்கள் தடை செய்யப்பட்டுள்ளன என்ற அடிப்படையிலேயே இந்தக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (2-6)

# இராணுவ இரகசியங்கள் விடுதலைப் புலிகளின் வலையமைப்பிற்கு எவ்வாறு கிடைக்கப் பெற்றது

## விசாரணைகள் ஆரம்பம்

இராணுவ இரகசியங்கள் தமிழீழ விடுதலைப் புலிகளின் சர்வதேச வலையமைப்பிற்கு எவ்வாறு கிடைக்கப் பெற்றதென்பது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்த காலத்தில் மிகவும் இரகசியமாக பேணப்பட்ட விசேட இராணுவப் பிரிவுகள் தொடர்பான தகவல்கள் புலிகளுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதன் மூலம் கொல்ப், ரோமியா, ஏகே மற்றும் டெல்டா அகிய நான்கு விசேட இராணுவப் பிரிவுகள் மற்றும் அதன் உறுப்பினர்கள் பற்றிய தகவல்கள் அம்பலமாகியுள்ளதாக புலனாய்வுத் தகவல்களை ஆதாரம்காட்டி திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அத்துடன் யுத்த இரகசியங்களை வெளியிட்ட தரப்பினர் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சிரேஸ்ட இராணுவ அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் வன்னி இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்ட குறித்த விசேடப் பிரிவுகள் தொடர்பிலான தகவல்கள் மிகவும் இரகசியமாக பேணப்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-6)

# கனடா சிறையிலிருந்து மேலும் 28 இலங்கையர் விடுவிப்பு

(கொழும்பு)

கனடாவில் வன்குவா சிறைச்சாலையில் நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள 76 இலங்கை அகதிகளில் மேலும் 28 பேர் கடந்த திங்களன்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

28 பேரின் விசாரணைகள் திருப்திகரமானதாக அமைந்த நிலையிலேயே இவர்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாக குடிவரவுத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த அகதிகளில் 24 பேர் முன்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையில் எஞ்சியிருந்தவர்களுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடர்புகள் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

விசாரணைகளின் போது இவர்களின் அறிக்கைகள் திருப்திகரமாக இருந்த நிலையில் அதிகாரிகள் விடுதலை செய்ய உத்தரவிட்டனர். இந்த 28 பேரும் கனடாவில் றொறன்ரோ மாநிலத்தில் குடியமர்த்தப்படுவர்கள் என அதிகாரி மேலும் தெரிவித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (2-6)

# அமைச்சர்களின் விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன

பண்டிகைக் காலத்தில் குடும்பங்களுடன் வெளிநாட்டு சுற்றுப் பயணங்களை மேற்கொள்ள உத்தேசித்திருந்த பல அமைச்சர்களது விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டும் என்ற நோக்கத்திற்காக இவ்வாறு விடுமுறைகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம் ஐரோப்பா மற்றும் கிழக்கு ஆசிய நாடுகளில் தமது விடுமுறையை கழிப்பதற்கு சில அமைச்சர்கள் சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்த நிலையில் ஜனாதிபதி சகல விடுமுறைகளையும் இரத்து செய்துள்ளதுடன் ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கு அனைத்து அமைச்சர்களும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமெனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (2-6)

# ரணில், பொன்சேகாவுக்கு எதிராக கே.பி. அறிக்கை வெளியிடவுள்ளார்

## லக்பிம

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோருக்கு எதிரான வகையில் குமரன் பத்மநாதன் அறிக்கை வெளியிடவுள்ளதாக லக்பிம பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த இருவருக்கும் பாதிப்பு ஏற்படக் கூடிய வகையில் அவர் விரைவில் ஊடகங்களின் ஊடாக அறிக்கை வெளியிடுவார் என குறிப்பிடப்படுகிறது.

இதன்பிரகாரம். எதிர்க்கட்சி வேட்பாளர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோருக்கு எதிராக குமரன் பத்மநாதன் வெளியிடவுள்ள தகவல்கள் தொடர்பில் விரைவில் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இந்த விவகாரம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க முடியுமா என்பது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி ஆராய்ந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (2-6)

# 700 தமிழ் கைதிகள் விரைவில் விடுதலை

## வீ. புத்திரசிகாமணி

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட சில தமிழ் கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அவரசகால மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட 700 பேரை விடுதலை செய்யத் தீர்மானித்துள்ளதாக பிரதி நீதி அமைச்சர் வீ. புத்திரசிகாமணி, தெரிவித்துள்ளார்.


ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ஆங்கில ஊடகமொன்று சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டவர்களில் சிலர் பத்து வருடங்களுக்கு மேலாக எவ்வித குற்றச்சாட்டுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதன்பிரகாரம் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு வழக்குத் தொடரப்பட்டுள்ள சந்தேக நபர்களைத் தவிர்ந்த ஏனையோர் விடுதலை செய்யப்படவுள்ளதாகவும் இந்தசந்தேக நபர்களை விடுதலை செய்வது தொடர்பில் நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் புத்திரசிகாமணி தலைமையிலான குழுவொன்று ஆய்வு நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் விடுதலை செய்யப்படுவதாக விடுக்கப்பட்டுள்ள அறிவிப்பு அவர்களது குடும்பங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2-6)


# வங்கியாளர்கள் கௌரவிப்பு











யாழ். மாவட்ட வங்கியாளர் சங்கத்தின் ஓய்வு பெற்ற வங்கியாளர்களை கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன், ஓய்வு பெற்ற வங்கியாளர்களை பரிசில் வழங்கி கௌரவிப்பதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 8 விதி எண் : 5

### உடலமைப்பு

பிறந்த எண் 8 விதி எண் 5 ஆகக் கொண்டவர்கள் சனி, புதன் இவர்களின் ஆதிக்கத்தில் பிறந்தவர்கள் ஆவர். இவர்கள் ஓரளவு உயரமானவர்களாக இருப்பர். எப்போதும் பரபரப்புடன் காணப்படுவர்.

### மன, குணவியல்பு

இவர்கள் எதையும் ஆராய்ந்தறியும் மனம் உள்ளவர்களாக இருப்பர். புதுமை விரும்பிகளாகவும் இயற்கைக் காட்சிகளை ரசிக்க வல்லவர்களாகவும் இருப்பர். எதையும் முழுமையாக ஆராய்ந்தறியக்கூடியவர்களாகவும் இருப்பர்.

இவர்களிடம் மன உறுதி இருக்கும். எதிலும் வெற்றி அடைய வேண்டுமென்ற எண்ணத்துடன் தைரியத்துடன் சலியாது உழைப்பர். இப்படிப்பட்ட இவர்கள் சில நோய்களினால் குழப்பத்திற்குள்ளாக நேரலாம். அதனால் தம் முயற்சியில் இடையிலேயே தடைபட நேரும்.

இவர்களின் வாழ்க்கையில் போராட்டங்கள் மிகுந்து காணப்படும். இவர்கள் அதற்கெல்லாம் அஞ்சாது எதிர் நீச்சலிட்டு வெல்பவராக இருப்பர், எப்போதும் சுறுசுறுப்பாகவும், பணம் சம்பாதிக்கும் வழிமுறையில் ஈடுபாடு கொண்டவர்களாகவும் இருப்பர்.

தம்மைப்போல் தம் கீழ் பணிபுரிபவர்களும் சுறுசுறுப்புடன் பணிபுரிய வேண்டுமென்று எதிர்பார்ப்பர். அப்படியில்லாத போது ஆத்திரத்திற்குள்ளாவர்.

இவர்களிடம் ஈவு இரக்கம், பிறருக்குக் கொடுக்கும் குணம் இருக்கும். பிறருக்குத் தம்மாலியன்ற உதவிகளைப் புரியத் தயங்க மாட்டார்கள். பிறருக்கு உதவுவதிலும் தாமே உயர்ந்தவர்களாக இருக்க வேண்டுமென்ற எண்ணம் இவர்களிடம் இருக்கும்.

அதைப் போன்ற செயல்பாட்டில் கூட மற்றவர்களைவிட தாமே விரைவாகவும் நேர்த்தியாகவும் செயல்புரியக் கூடியவராகத் திகழ வேண்டுமென்று எதிர்பார்ப்பர். பிறர் தம்மைவிடச் சிறந்தவர் என்று பெயர் பெற்றுவிட்டால். சகித்துக்கொள்ள மாட்டார்கள். வேதனைக்குள்ளாவர்.

இருப்பினும் தன் இனம், நாடு போன்றவற்றின் உயர்வுக்குப் பாடுபடக் கூடியவர்களாக இருப்பர். கடவுள் பக்தியுள்ளவர்.

அத்துடன் எல்லாவிதத் தீய பழக்கங்களுக்கும் உள்ளாகி இருப்பர். ஆனால் எதற்கும் அடிமையாக இருக்க மாட்டார்கள். தூங்குவதில் வல்லவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கையில் பிரச்சினை இருந்த வண்ணமிருக்கும். இவர்கள் எதிர் நீச்சலிட்டுச் செல்ல நேரும். இவர்களில் ஆணாக இருப்பின் பெண்களாலும் பெண்ணாக இருப்பின் ஆண்களாலும் குடும்பத்தில் கலக்கமும் அதனால் போராட்டமும் ஏற்படும். இருப்பினும் இவர்கள் தம் வாழ்க்கையில் வெற்றியும் முன்னேற்றமும் பெறும் வழிமுறையில் வேகமாக இருப்பர்.

### தொழிலும், வருமானமும்

இவர்கள் எதையும் உன்னிப்பாக ஆராய்ந்தறியும் திறன் கொண்டவர்கள். பொறியியல் சார்ந்த மின்சாரம். எல்க்ட்ரானிக், வண்டி வாகனத் தயாரிப்பு போன்ற துறைகளில் நாட்டமுள்ளவர்களாக இருப்பர். அத்துடன் மருத்துவம் சட்டத்-துறைகளில் கூட ஈடுபட்டிருப்பர். இத்துறைகளில் அரசு சார்பில் அல்லது தனியார் நிறுவனத்தில் பணிபுரிபவர்களாகவும் இருப்பர். சமயம், கணிதம், ஜோதிடத்தில் கூட வல்லுனர்களாக இருப்பர்.

ஏற்றுமதி இறக்குமதித் துறைகளில் இவர்கள் பங்கு கொள்ளக்கூடும்.

இவர்கள் எத்துறையிலும் அதிக அக்கறையுடன் செயல்பட்டு பெருமளவு பொருள் ஈட்டக்கூடியவர்களாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு, நரம்பு மற்றும் வாத சம்பந்தமான நோய்கள் முதுகுவலி, மூட்டுவலி போன்றன ஏற்படும். இரத்தக் கொதிப்பு கண் நோய், மூலம், பவுத்திரம் போன்றனவும் மதுமோகம் எனப்படும் நீரிழிவு நோயும் ஏற்பட வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் சுக்கரன், புதன் ஆதிக்கம் பெற்ற 5,6 அது தொடர்பிலான யோகப்பலன் தரும் எண்களுக்கு பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

தம் நிறுவனங்களுக்கும் 5,6 தொடர்பிலான எண்களில் அமையும் பெயர்கள் யோகமானவை.

இவர்களுக்கு 1,5,6 அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமானவை.

ஆனால் சனியின் ஆதிக்கம் பெற்ற 8 அது தொடர்புடைய எண், திகதி யோகமற்றவை.

## உடல் எண் : 8 விதி எண் : 6

### உடலமைப்பு

பிறந்த எண் 8 விதி எண் 6 ஆகக் கொண்டவர்கள் சனி, சுக்கிரன் ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் சற்று உயரமானவர்களாக இருப்பர். இவர்களின் கண்கள் சிவந்தும், கவர்ச்சியுடனும் காணப்படுவர்.

### மன, குணவியல்பு

இவர்களை சிறந்த அறிவாளிகள் என்று கூறலாம். அனுபவமிகுந்தவர்கள். பிறருக்கு உபதேசம் செய்வதிலும் இக்கட்டான நேரங்களில் யோசனை கூறுவதிலும் வல்லவர்களாக இருப்பர்.

ஆனால் அதே நிலைமை தனக்கு ஏற்படுமானால் கோழைகளாகி விடுவர். பெருமளவு குழப்பத்திற்கும் வேதனைக்கும் உள்ளாவர்.

அதைப்போன்று தான் பிறருக்கு ஒரு காரியத்தில் ஈடுபட்டுச் செய்தாலும் துணிச்சலுடன் செய்து வெற்றியைத் தேடித் தருவர். ஆனால் தனக்கென்று செய்யும் போது சோர்ந்து பிறரைத் துணைக்கு அழைப்பர்.

இவர்களைப் பிடிவாதக்காரர்கள் என்று கூறிவிட முடியாது. தாம் செய்வது கெடுதலானது என்று தெரிந்தாலோ பிறர் கூறினாலோ அதை விட்டுவிடத் தயாராவர். தமக்கோ, பிறருக்கோ தீமையளிக்கும் எந்த ஒரு செயலையும், தெரிந்து செய்ய மாட்டார்கள்.

இயற்கைக் காட்சிகளை ரசிப்பதில் வல்லவர்களாக இருப்பர். பல ஊர்களைச் சுற்றி வர ஆர்வமுள்ளவர்களாக இருப்பர். ஆனால் எந்தவொரு செயலையும் இலாபமின்றிச் செய்ய மாட்டார்கள்.

காமவெறி மிகுந்தவர்கள். ஆடம்பரப் பொருட்களில் அதிக நாட்டமுள்ளவர்கள். தம் வீடு, வாகனங்கள் போன்றவற்றைக் கவர்ச்சியாக வைத்திருப்பர். இவர்களிடம் தயவு தாட்சண்யம் இருக்கும். பிறர் கஷ்டப்படுவதைக் கண்டு பொறுக்காது தம்மாலியன்ற உதவி புரிவர்.

மத நம்பிக்கையும் கடவுள் பக்தியும் கொண்டவர்களாக இருப்பர். எப்போதும் சோம்பலின்றி சுறுசுறுப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத் துறை பொருத்தமாக அமையும். குடும்பத்தில் படிப்படியான முன்னேற்றம் உண்டாகும். இருந்தாலும் சில நேரங்களில் ஏற்படும் சிறு பிரச்சினைகளுக்கும் பெருமளவு வேதனைப்படக் கூடியவர்களாகவும் தம் அமைதியைத் தாமே கெடுத்துக் கொள்ளக் கூடியவர்களாகவும் இருப்பர்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலையார்வமிக்கவர்கள். கதை, காவியம் புனைதலில் ஈடுபாடு கொண்டிருப்பர். இவை தவிர பொறியியலில் மின்சாரம், எலக்ட்ரானிக், மோட்டார் வாகனத் தொடர்பான தொழிலில் ஈடுபட்டிருப்பர். சிலர் மருத்துவம், சட்டம், கணிதம், ஜோதிடம் போன்ற துறைகளில் ஈடுபட்டிருக்கக்கூடும்.

அழகு சாதனம் மற்றும் ஆடம்பரப் பொருட்களைத் தயாரிப்பவர்களாகவோ அவை தொடர்பான நிறுவனங்களில் பணிபுரிபவர்களாகவோ, ஏஜென்சிகளாகவோ இருக்கக் கூடும்.

இவர்கள் இலட்சியவாதிகள். தாம் ஈடுபடும் தொழிலில் வெற்றி பெற்று அதிகமாக சம்பாதிக்க வேண்டுமென்று இலட்சியத்தோடு இருப்பர். அதனால் சம்பாதனையும் சிலர் சொத்து சேர்க்கையும் பெறுவர்.

### ஆரோக்கியநிலை

இவர்கள் இருதய சம்பந்தமான நோய், இரத்த அழுத்தம் போன்றவற்றிற்கும் மூட்டு வலி, வயிற்று வலி, மலச்சிக்கல் போன்ற நோய்களுக்கும் ஆளாகக் கூடும். இவர்களுக்கு சரும நோய்களும் ஏற்பட வாய்ப்புண்டு.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன், சுக்கிரன், சூரியன் ஆதிக்கத்திற்குட்பட்ட 6,5,1 அது தொடர்பிலான யோகப் பலனுள்ள எண்களுக்கு தம் பெயரை அமைத்துக் கொள்ள யோகமாகும்.

தம் நிறுவனங்களுக்கும் 6,5,1 தொடர்பிலான பெயர் அமைக்கஅதிர்ஷ்டமாகும்.

இவர்களுக்கு 6,5,1 தொடர்பிலான எண்களும் திகதியும் யோகப் பலனளிப்பவை.

ஆனால் குரு, சனி தொடர்பிலான 3,8 மற்றும் அது தொடர்பிலான எண்களும் திகதியும் யோகமற்றவை.

(தொடரும்)

# பகிரங்க விவாதத்துக்கு வருமாறு ஜனாதிபதிக்கு எதிர்க்கட்சி அழைப்பு

(கொழும்பு)

யுத்த நடவடிக்கையுடன் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடிகள் தொடர்பான பகிரங்க விவாதத்துக்கு வருமாறு எதிர்க்கட்சி பொது வேட்பாளரின் ஊடகப் பிரிவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

அந்தப் பிரிவின் இணை ஊடகப் பேச்சாளர்களான அனுர குமார திஸாநாயக்க, மங்கள சமரவீர ஆகியோர் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே, இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, ஜெனரல் சரத் பொன்சேகா மீது சுமத்திய குற்றச்சாட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு இந்த விவாதம், நடத்தப்பட வேண்டுமெனவும், அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விமல் வீரவன்சவுக்கு யுத்த நடவடிக்கை தொடர்பில் போதிய தெளிவு இல்லாததால் அவருடன் விவாதிப்பது அர்த்தமற்றது எனவும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக இருந்த போது பாதுகாப்பு அமைச்சராக செயற்பட்ட ஜனாதிபதிக்கு அப்போது இடம்பெற்ற ஆயுதக் கொடுக்கல் வாங்கல் தொடர்பான பொறுப்பும் தெளிவும் உள்ளதாக அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் அப்போதைய இராணுவத் தளபதியும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள பொது வேட்பாளருமான சரத் பொன்சேகா மற்றும் அன்று முதல் இன்றுவரை பாதுகாப்பு அமைச்சராக பதவி வகிக்கும் ஜனாதிபதிக்குமிடையே இந்த விவாதம் நடைபெறுவதே உகந்தது எனவும் அந்தக் கடிதத்திலே தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# தமது ஆட்சிக்காலத்தில் சகல இன மதத்தலைவர்களுக்கும் மதிப்பளிக்கப்படும்

## கொழும்பு பேராயருடனான சந்திப்பில் சரத்

(கொழும்பு)

கொழும்பு பேராயர் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கும் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவிற்கும் இடையில் விசேட சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

மதங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதன் அவசியம் குறித்து இந்த சந்திப்பின் போது முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரிகிறது.

இந்தச் சந்திப்பில் சமூகப் பிரச்சினைகளுக்கு சர்வமத இணக்கப்பாட்டின் மூலம் தீர்வு பெற்றுக் கொள்ள முடியும் என பேராயர் சுட்டிக்காட்டியுள்ளதுடன் தேசியப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு பெற்றுக் கொடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானதெனவும் அவர் தெரிவித்துள்ளார்.



அத்தோடு இடம்பெயர் மக்கள் தமது சொந்த இடங்களில் மீள் குடியமர்த்தப்பட வேண்டும் எனவும் பேராயர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை மதத் தலைவர்களின் ஆலோசனைகளையும் அறிவுரைகளையும் தாம் ஏற்றுக் கொள்வதாகவும் தமது ஆட்சிக் காலத்தில் சகல மதத் தலைவர்களினது அறிவுரைகளுக்கும் மதிப்பளிக்கவுள்ளதாகவும் ஜெனரல் சரத் பொன்சேகா உறுதியளித்துள்ளார். (2-6)

> சரியாகத் திட்டமிட்டால் முதல் முயற்சியிலேயே பாதித் தூரத்தை நிச்சயம் அடைந்து விடலாம்.
>
> – என்.ஹில்

வலம்புரி

## கொல்லுகிறது 'டெங்கு' காய்ச்சல் நீவிர் இன்னும் துயிலுதியோ!

யுத்தம், சுனாமி, சிக்கின்குனியா, நிஷா என்ற அழிவுகளுக்கு எங்கள் உறவுகளைப் பலிகொடுத்து பரிதவிக்கும் இந்த வேளையில் "டெங்கு"நோயும் எங்களை கருவறுக்க முனைப்புக் கொண்டுள்ளது.

டெங்கு நோய்க்கு ஏழு பேர் பலியாகி விட்டனர் என்ற அதிர்ச்சித்தகவலையும்,சுமார் நானூறு பேர் இதுவரை இனங்காணப்பட்டுள்ளனர் என்ற உண்மைத் தகவலையும் யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் அவர்கள் வெளியிட் டுள்ளார்

அவரின் இந்த தகவலை பொதுமக்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்வார்களாயின் அது மாபெரும் தவறாகும்

கல்வியங்காட்டில் வசிக்கின்ற ஒரு குடும்பத்தின் பன்னிரண்டு வயது நிரம்பிய ஒரே ஒரு பெண் பிள்ளை டெங்கிற்கு பலியாகிப் போன அந்தத் துயரத்தில், பிள்ளைச் செல்வத்தை இழந்து அந்தக் குடும்பம் துடிக்கின்றது.

வவுனியாவிலிருந்து தன் பேரனைப் பார்க்க யாழ்ப்பாணத்திற்கு வந்த பாலகியை டெங்கு பலியாக்கிய சோகம் தாங்க முடியாதது.

பல்கலைக்கழகத்தில் பட்டச்சான்றிதழ் பெறும் ஆவலோடு கல்வியை மேற்கொண்ட மாணவிக்கு டெங்கு மரணச் சான்றிதழ் வழங்கியது.

இதுபோல பலதுயரச் செய்திகள். இவற்றிற் கெல்லாம் நாங்களும் காரணம் என்ற உண் மையை மறந்துவிடலாகாது.

நுளம்பினால் பரப்பப்படும் டெங்கு நோயை இல்லாது ஒழிப்பதாயின் நுளம்பை இல்லா தொழிக்க வேண்டும்.

நுளம்புகளின் பெருக்கம் – அவற்றின் வாழ் விடம் என எல்லாமுமே எங்கள் சுற்றுச் சூழல்தான்.

நுளம்புகளின் பெருக்கத்திற்கு அவற்றின் தங்குமிடத்திற்கு யார் யாரெல்லாம் துணை புரிகிறார்களோ! அவர்களே "டெங்கு" காய்ச்சலினால் பலியாகிப் போனவர்களின் மரணத் திற்கும் காரணமானவர்கள்.

"மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்" என்ற வாசகம் மெய்ம்மை பெற வேண்டுமாயின் நாங்கள் எங்கள் சுற்றுச் சூழலை தூய்மையாக வைத்திருப்பது கட்டாயமானதாகும்.

எல்லா மக்களும் ஒன்றிணைந்து – எங்களுக்கென்ன என்ற மனநிலை மறந்து ஒவ் வொருவரும் நாம் வாழும் சூழலை தூய்மைப் படுத்துவோம்.

வந்த பின்னர் வேதனைப்படுவதை விடுத்து வரும்முன்னர் காக்கும்பணியை முன்னெடுப்போம்.

குடாநாட்டுப்பாடசாலைகளில் 2010ம் ஆண்டின் முதலாம் தவணை இன்று ஆரம்பமாகின்றது.

நுளம்பின் பெருக்கம் பாடசாலைகளையும் ஆக்கிரமித்திருப்பதால் பாடசாலைச் சூழலைத் தூய்மைப்படுத்துவது அவசியம் என்ற யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் கருத்தை நெறிப்படுத்துவோம்.

ஆகவே மாணவர்கள், பெற்றோர்கள் சமூக நலன்விரும்பிகள், பொதுமக்கள் என அனைவரும் இணைந்து நுளம்பை ஒழிப்போம்.

மரணத்தைத்தர வேகமெடுத்துவரும் டெங்கு நோயின் அபாயம் உணர்ந்தும் இன்னும் துயிலுதல் முறையோ! அன்பர்காள்! விழித்தெழுவோம்! நுளம்பை ஒழித்திடுவோம் வாரீர்.

# மகேஸ்வரனை கொலை செய்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர்

## ரணில் காரைநகரில் தெரிவிப்பு

தேர்தலில் வெற்றிபெற்றதும் முன்னாள் அமைச்சர் மகேஸ்வரனைக் கொலைசெய்தவர்களை இனங்கண்டு தண்டனை வழங்குவோம் என்று எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க காரைநகரில் தெரிவித்தார்.

காரைநகரில் மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக அமைக்கப் பட்ட மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும்போதே அவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலிற்கான பிரசாரப் பணிக்காக யாழ் குடாநாட்டிற்கு விஜயம் மேற்கொண்ட எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜயலத் ஜெயவர்த்தன, ரவி கருணாநாயக்க உள்ளிட்ட குழுவினர் காரைநகரிற்கு விஜயம் மேற்கொண்டனர்.

காரைநகர் மணற்காட்டு முத்துமாரி அம்மன் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாட்டில் கலந்து கொண்ட பின்னர் ஆலயத்திற்கு அருகில் அமைந்துள்ள மகேஸ்வரன் தர்மசுரபி மண்டபத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க மேலும் உரையாற்றுகையில்,

யாழ் குடாநாட்டிற்கு விஜயத்தினை மேற்கொண்ட போதும் மறைந்த மகேஸ்வரனின் சொந்த ஊரிற்கு விஜயம் மேற் கொண்டது அவரையும் அவரது சேவையையும் கௌரவிப் பதற்கே ஆகும்.

மகேஸ்வரன் யாழ் குடாநாட்டினை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று துணிச்சலுடன் வாதாடியவர். நீண்ட எதிர்கால சிந்தனைகள் கொண்டவர். இவருக்கு ஆரம்பத்தில் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. ஆனாலும் மகிந்த அரசு தமக்கு உதவிவழங்குமாறு கேட்டபோது அற்ப சலுகைக்காக ஐக்கிய தேசியக்கட்சியை தாரைவார்க்க மாட்டேன் என்று உறுதியாகத் தெரிவித்து தமிழ்மக்களின் அபிலாசைகளை பாதுகாப்பதில் ஈடுபட்டார். இதனால் இவரின் பாதுகாப்பு குறைக்கப்பட்டு இரு பொலிசார் மட்டுமே பாதுகாப்பாக வழங்கப்பட்டனர். இதன்போதுதான் மகேஸ்வரன் கொலை செய்யப்பட்டார்.

மகேஸ்வரனின் கொலைச் சந்தேகநபர் விடுதலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலைக்கு அரசே பொறுப்புக் கூற வேண்டும். நாம் தேர்தலில் ஆட்சிக்கு வந்ததும் மகேஸ் வரனைக் கொலை செய்தவர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்குவோம். மகேஸ்வரன் ஞாபகார்த்தமாக யாழ் குடாநாட்டினை அபிவிருத்தி செய்வோம் என்றும் தெரிவித்தார்.

இக் கூட்டத்தினைத் தொடர்ந்து வியாவில் ஐயனார் ஆலயத்திற்குச் சென்ற ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினர் அங்கு நடைபெற்ற ஐயப்பன் பூசையில் கலந்துகொண்டு திரும்பினர். (ச-246)

# கடற்தொழில்சார் பிரச்சினைகளுக்குத் தீர்வு சமூக சேவைகள் அமைச்சு அறிவிப்பு

யாழ் குடாநாட்டில் கடற்றொழிலில் ஈடுபடுவது தொடர்பில் இதுவரை காலமும் இருந்து வந்துள்ள தடைகளில் பல எதிர் வரும் வாரம் முதல் நீக்கப்படவுள்ளதாக சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சின் செய்திக்குறிப்பில் தெரி விக்கப்பட்டுள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூகசேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்டிருந்த தொடர் முயற்சிகளின் காரணமாக ஏற்கனவே 24 மணிநேரமும் கடற் தொழிலில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்நிலையில் பாதுகாப்பு காரணங்களிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ஏற் பாடுகள் காரணமாக பல்வேறு தடைகள் இருந்துவந்த நிலையில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடந்த 21ம் திகதி கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் திசர சமரசிங்க மற்றும் வட பிராந்திய கடற்படை கட்டளை அதிகாரி ரியல் அட்மிரல் எஸ்.ஏ.எஸ். கொலம்பகே ஆகியோருடன் தொடர்புகொண்டு கலந்துரையாடியதற்கு இணங்க கடற்தொழிலில் ஈடுபடுபவர் களிற்கான பாஸ் அனுமதி முறைமை இரத்துச் செய்யப்பட்டது.

கடற்தொழிலாளர்கள் விரும்பிய நேரம் கடலுக்குச் சென்று விரும்பிய நேரம் கரைக்குத் திரும்புவதற்கும் மீள்குடியமர்ந்துள்ள கடற்தொழிலாளர்கள் ஏனைய கடற்தொழிலாளர்களைப் போல் சுதந்திரமாகத் தொழிலில் ஈடுபடுவதற்கும் விரும்பிய இடங்களிற்குச் சென்று வருவதற்கும் அனுமதி வழங்கப்பட்டு ள்ளது.

இந்த நிலையில் தீவகப்பகுதிகளைச் சேர்ந்த கடற் தொழி லாளர்களது ஏனைய தடைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது. இச்சந்திப்பின் போது பின்வருவனவற்றுக்கு இணக்கம் காணப்பட்டது.

வெளிச்சங்களைப் பயன்படுத்தி கடற்தொழிலில் ஈடுபடுவ தற்கும், கடலட்டை மற்றும் சங்கு பிடிப்பதற்கும், இதன்போது கண்ணாடி மற்றும் சப்பாத்துக்களை உபயோகிப்பதற்கும் அனுமதிக்கப்பட்டது.

புங்குடுதீவிற்கும் நயினாதீவிற்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் கடற்தொழிலைமேற்கொள்ளலாம். நயினாதீவு கடற்தொழி லாளர்கள் தங்களது சொந்த படகுகளில் குறிகட்டுவானுக்கு மீன்களைக்கொண்டு வருவதற்கும் அனுமதிப்பது.

செட்டிப்புலம் கடற்தொழிலாளர்களது படகுகள் அல்லைப் பிட்டிவரை செல்வதற்கும் சுருவில் பகுதியில் கடற்தொழிலாளர் களுக்கென அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடி அமைந்து ள்ள வீடுகளை உரிமையாளர்களிடம் வழங்குவதற்கும் ஊர் காவற்றுறை துறைமுகத்திற்கு அனலைதீவு, எழுவைதீவு, நயினாதீவு போன்ற பகுதிகளில் இருந்து படகுகள் வந்து போவதற்கும் தம்பாட்டி கடற்தொழிலாளர்கள் வெளிக்கடல் பகுதிகளுக்குச் சென்று தொழிலில் ஈடுபடுவதற்கும் அனுமதி.

காரைநகர் சீநோர் – தோப்புக்காடு பாதையை பொது மக்களின் பாவனைக்கு விடுவதற்கும் காரைநகர் வட்ட வீதியில் தனியார் போக்குவரத்தை மேற்கொள்வதற்கும் துறைமுகப் பகுதியில் உள்ள பஸ்தரிப்பு நிலையத்தை மீள செயற்படுத் துவதற்கும் ராசா தோட்டம் மற்றும் நீலங்காடு பகுதிகளில் மக்களை மீளக் குடியமர்த்துவதற்கும் பாலாகெட சோதனைச் சாவடியின் முன்பாக உள்ள கடற் பகுதியில் தொழிலில் ஈடுபடுவதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் இவை அனைத்தும் அடுத்தவாரம் முதல் அமுலுக்கு வரவுள்ளன.

இதேநேரம்நெடுந்தீவு நோக்கி பயணிக்கும் இறுதிப் படகில் பயணம் செய்யும் பயணிகளின் வசதி கருதி மாலை வேளைகளில் இரு தடவைகளாக பஸ் போக்குவரத்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் க்வின்டா கடற்கரை ஊடாக கடற் தொழிலுக்கு செல்வதற்கும் மாவலித்துறையில் கடற்படை யினரின் படகுகளை தரித்துவைப்பதை தவிர்த்துக் கொள்வ தற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நயினாதீவு வங்களாடி பாதையை பொதுமக்களின் பாவனைக்காக திறப்பதற்கும் அனுமதிக்கப்பட்டது. (ச)

## டெங்கு ஒழிப்பு தொடர்பான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

டெங்கு ஒழிப்புத் தொடர்பான கரவெட்டி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கரவெட்டிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கரவெட்டிப் பிரதேச செயலக பிரிவிற் குட்பட்ட கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விவசாய சம்மேளனங்கள் ஆகியவற்றிலிருந்து தலா இரண்டு பிரதிநிதி களையும் இப்பிரிவிற்குட்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் தலை வர்களையும் மற்றும் தனியார் கல்விநிலைய நிர்வாகிகளையும் கலந்து கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார். (ச-14)


## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்

### கல்வியும் சமுதாயமும்



மற்றவர்களிடம் தீய தன்மை இருப்பதாக நீ உணராதே. தீய தன்மை பலவீனத்தாலும் அறியாமையாலும் ஏற்படுகிறது. மக்களிடம் நீங்கள் பலவீனமானவர்கள் என்று சொல்வதனால் என்ன நன்மை ஏற்படப்போகிறது? குறை கூறுவதனாலும் அழிவு முறையினாலும் எந்த விதமான நன்மையும் ஏற்படப்போவதில்லை. இவற்றைவிட உயர்ந்தது எதையாகிலும் அவர்களுக்கு நாம் தர வேண்டும். அவர்களுடைய பெருமைக்கு உரிய இயல்பை, அவர் களுடைய பிறப்புரிமையை அவர்களிடம் எடுத்துச்சொல்.

நான் "சீர்திருத்தம்" என்று சொல்லவில்லை. மாறாக "முன்னேறிச் செல்" என்று சொல்கிறேன். இப்போது சீர்திருத்தம் செய்ய வேண்டிய அளவுக்கு எதுவும் கெட்டுவிடவில்லை.





சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் நடைபெற்ற பிரார்த்தனை நிகழ்வில் கொழும்பிலிருந்து வருகை தந்த தவநேசன்ஜி ஸ்ரீ அம்மா பகவானுக்கு தீபாராதனை, வழிபாடுகள் நிகழ்த்துவதையும், கலந்துகொண்ட பக்தர்களையும் படங்களில் காணலாம்.

# யாழ்.மாவட்டத்தில் இன்று முதல் ஒரு வார காலத்திற்கு டெங்கு கட்டுப்பாட்டு வாரம் பிரகடனம்

யாழ்.மாவட்டத்தில் டெங்கு நோய் தொடர்ந்து வேகமாகப் பரவி வருகின்றது. இதுவரை 400க்கு மேற்பட்ட நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் ஏழு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளதாக யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் மாவட்ட டெங்கு நோய் கட்டுப்பாட்டு கூட்டம் நேற்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், உள்ளூராட்சி மன்ற செயலாளர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள்,சுகாதார பணிப்பாளர், சுகாதாரத் திணைக்கள உயரதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள், பாதுகாப்புப் படை பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக டெங்கு நோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை தீவிரப்படுத்த இன்று திங்கட்கிழமை முதல் ஒரு வாரம் யாழ். மாவட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு வாரமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவ் வாரத்தில் பின்வரும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது.

◆ பிரதேச மட்டத்தில் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க பிரதேச டெங்கு நோய் கட்டுப்பாட்டு ஒருங்கிணைப்பு கூட்டம் பிரதேச செயலாளரால் ஒழுங்கு செய்யப்படும்.

◆ ஒவ்வொரு பாடசாலையிலும் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட முதல் நாளே சிரமதானப் பணி மூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்கள் அழிக்கப்பட வேண்டும்.

◆ ஒவ்வொரு நிறுவனத்திலும், திணைக்களத்திலும் ஊழியர்களின் பங்களிப்புடன் சிரமதானப் பணி இடம்பெறவேண்டும்.

◆ ஒவ்வொரு தனியார் கல்வி நிலையமும் உரிமையாளர்களால் உடனடியாக துப்புரவு செய்யப்படவேண்டும்.

◆ பொது இடங்கள் உள்ளூராட்சி மன்றங்களால் உடனடியாக கிரமமாக துப்புரவு செய்யப்படவேண்டும்.

◆ மத வணக்கத் தலங்கள் சம்பந்தப்பட்ட பரிபாலன சபையினரால் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் துப்புரவு செய்யப்பட வேண்டும்.

◆ கிராம அபிவிருத்தி சங்கங்கள்,மாதர் அபிவிருத்தி சங்கங்கள்,சனசமூக நிலையங்கள் தத்தமது கிராம மட்டத்தில் சிரமதானப் பணி மூலம் சுத்திகரிப்பு பணி மேற்கொள்ளப்பட வேண்டும்.

◆ உள்ளூராட்சி மன்றங்கள் திண்மக் கழிவுகளை கிரமமாக அகற்றி, சரியான முறையில் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும்.

◆ கழிவுநீர் வடிகால்கள் நீர் தேங்காதவாறு தினமும் சுத்திகரிக் கப்படவேண்டும்.

◆ வீதியோரங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களங்களால் உடனடியாக துப்புரவு செய்யப்படவேண்டும்.

◆ ஒவ்வொரு நிறுவன மட்டத்திலும் டெங்கு விழிப்புணர்வு கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்படவேண்டும். அதற்கு உரிய உதவிகளை சுகாதார வைத்திய அதிகாரிகள் / பொது சுகாதாரப் பரிசோதகர்கள் வழங்குவார்கள்.

◆ கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் அபிவிருத்தி சங்கங்கள், சனசமூக நிலையங்கள் கிராம மட்டத்தில் டெங்கு விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை பொது சுகாதாரப் பரிசோதகர்களின் உதவியுடன் ஏற்பாடு செய்தல்வேண்டும்.

◆ ஒவ்வொரு வீட்டு உரிமையாளரும் / குடியிருப்பாளரும் தத்தமது வீட்டு வளாகத்தில் சுத்திகரிப்பு பணிமூலம் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் இடங்களை அழிக்கவேண்டும்.

இச் செயற்பாடுகளை இந்த ஒரு வார காலத்திற்குள் முன்னெடுத்து டெங்கு நோயைக் கட்டுப்படுத்த ஒத்துழைக்குமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனைவரையும் கேட்டுக்கொண்டுள்ளார். (6-2)

## தொடர் கருத்தரங்கு

இடம் :- நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.
காலம் :- 15.01.2010 தொடக்கம் பிரதி வெள்ளிக்கிழமை தோறும்
நேரம் :- மாலை 4.00 மணி
விடயம் :- ''நாவலர் காட்டிய சைவவாழ்வியல்''
(சைவ வினாவிடையை அடிப்படையாகக் கொண்டது)
உரையாற்றுபவர் :- சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம்
(முதுகலைமாணி சைவசித்தாந்தம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
சு.பரமநாதன்
செயலாளர், இந்து அமைப்புக்களின் ஒன்றியம்

# யாழ்ப்பாண கடலில் தமிழக மீனவர்கள் அத்துமீறல்

(கொழும்பு)

யாழ்ப்பாண கடல் வலயத்தில் மீன்பிடித் தடை நீக்கப்பட்டாலும் கூட அதன் பயன்களை அங்குள்ள, சுமார் 20 ஆயிரம் மீனவக்குடும்பங்கள், அனுபவிக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு நாள்தோறும் தமிழக மீனவர் களின் அத்துமீறிய மீன்பிடிகளே காரணம் எனக் கூறப்படுகின்றது.

யாழ்ப்பாண மீன்பிடி கூட்டுறவு சம்மேள னத்தின் தலைவர் டி.தவரட்ணம், இந்த நிலை தொடருமாக இருந்தால் இன்னும் சில வருடங்களில் மீன்பிடியே இல்லாது போய் விடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அவரின் கருத்துப்படி தற்போது யாழ்ப் பாண நகரில் இருந்து ஐந்து கிலோமீற்றர் பகுதியிலும், மண்டைதீவு,பாலதீவு மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலும் இந்திய மீனவர்கள் தமது நடவடிக்கைகளை மேற் கொண்டு வருவதாக குற்றம் சுமத்தப்பட்டுள் ளது.

இதேவேளை இந்திய மீன்பிடிப் படகுகளி னால், யாழ்ப்பாண மீனவர்களுக்கு பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டு வருவதாக மீன்பிடித் துறை அமைச்சின் யாழ்ப்பாண அலுவலகம் தெரிவித்துள்ளது. (2-6)

**வலி. கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**28.12.2009 ஆம் திகதி இடம்பெற்ற ஊழியர் நலன்புரிச்சங்க அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பில் வெற்றிபெற்ற இலக்கங்களின் விபரம்**

01. 01 ஆம் பரிசு - 2297
02. 02 ஆம் பரிசு - 1356
03. 03 ஆம் பரிசு - 2107

ஆறுதல் பரிசுகள்

04. 04 ஆம் பரிசு - 193
05. 05 ஆம் பரிசு - 1281
06. 06 ஆம் பரிசு - 580
07. 07 ஆம் பரிசு - 1754
08. 08 ஆம் பரிசு - 4014
09. 09 ஆம் பரிசு - 2026
10. 10 ஆம் பரிசு - 2130

இப் பரிசில்களுக்கான அதிர்ஸ்டலாப சீட்டுக்களுடன் 15.01.2010 ஆம் திகதிக்கு முன்னர் வலி கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் நேரடியாக வருகை தந்து பரிசில்களை பெற்றுக்கொள்ளவும்.

ஒத்துழைப்பிற்கு நன்றி.

வலி கிழக்கு பிரதேச சபை
ஊழியர் நலன்புரிச் சங்கம்.

(C-4114)

# தகவல் வழங்க புதிய இலக்கம்

(கொழும்பு)

இராணுவத் தலைமையகம் புதிய தொலைபேசி இலக்கமொன்றை பொதுமக்கள் தகவல் வழங்குவதற்காக நேற்று முன்தினம் முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. சந்தேகத்துக்குரிய முறையிலான நடமாட்டம் பொதிகள் தொடர்பான தகவல்களை 114 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு வழங்க முடியுமென இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.குறிப்பிட்ட இந்தத் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை வழங்குவோர் குறித்த விபரங்கள் மிக இரகசியமாகப் பேணப்படுமெனவும் தலைமையகம் தெரிவித்துள்ளது. (2-6)


அச்சுவேலிப் பொதுச் சந்தையில்...

## அதிசயம் ஆனால் உண்மை

அச்சுவேலிப் பொதுச் சந்தையில் கடந்த 10 வருடங்களுக்கு மேல் நடைமுறையில் இருந்து வந்த அடாவடித்தனங்கள், சர்வாதிகார நடைமுறைகள் அனைத்தும் முற்றாக நீக்கப்பட்டு பாவனையாளர்கள் -விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு நன்மையளிக்கக் கூடிய புதிய ஒழுங்குகள் 2010.01.01 வெள்ளிக்கிழமை முதல் அமுல்செய்யப்படுகின்றன.

◆ விவசாயிகள் தங்களது விளைபொருட்களைத் தமது விருப்பத்திற்கேற்ப சுயேச்சையாக விலைகூறி விற்கலாம். இதில் எந்தவிதமான கையாடலோ, நிறை மோசடியோ, தரகுகூலியோ நடைமுறையில் இருக்காது.

◆ வாழைக்குலை விற்பனை, தேங்காய் விற்பனை போன்றவற்றில் கடந்த காலத்தில் பின்பற்றப்பட்டு வந்த தனிமனித சர்வாதிகாரத்திற்கு இடமே இல்லை. விரும்பிய விதத்தில் விலைகேட்டுப் பெற்றுக் கொள்ளலாம். விலைகூறி விற்றுக்கொள்ளலாம்.

◆ ஒருமுறை வந்து பாருங்கள் உங்கள் அபிப்பிராயத்தை நேரடியாகவோ, அபிப்பிராயப் பெட்டியிலேயோ அறியத் தாருங்கள்.

உங்கள் திருப்தியே எங்கள் சேவை

வீடியோ கலாமினி
அச்சுவேலி.

(192)

# ‘நான் சுயநலவாதியாக இருக்க மாட்டேன்’

# மேற்கிந்தியத்தீவுகள் அணியுடனான தொடருடன் டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து விடைபெறுகிறேன்

## மனம் திறந்தார் முத்தையா முரளிதரன்



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னணி சுழல் பந்து வீச்சாளரான முரளிதரன், சமீபத்தில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டித் தொடரில் காயமடைந்து ஓய்வெடுத்துவருகிறார்.

இந்த நிலையில் அவரது வருங்காலத் திட்டம் என்னவென்று கேட்டதற்கு பதிலளிக்கையில்,

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிராக இலங்கையில் நடைபெற இருக்கும் 2 டெஸ்ட் போட்டியில் விளையாடி 800 விக்கெட்டுக்களை கடந்து டெஸ்ட் கிரிக்கெட் வாழ்க்கையை முடிக்கத்திட்டமிட்டுள்ளேன்.

2011 ஆம் ஆண்டு உலகக்கோப்பைப் போட்டி வரை ஒருநாள் போட்டியில் விளையாடவிரும்புகிறேன். ஆனால் இவையெல்லாம் அப்படி நடக்குமா என்பதை பார்க்க வேண்டும்.

அணியில் நான் எந்தவகையில் தேவையாக இருக்கிறேன் என்பது முக்கியமாகும். சுயநலத்துடன் செயல்பட நான் விரும்பவில்லை. நல்லபடியாக பந்து வீசமுடியும் என்ற நிலை இருந்தால் மட்டுமே நான் தொடர்ந்து விளையாடுவேன்.

இல்லையெனில் மகிழ்ச்சியுடன் விடைபெறுவேன். ஏனெனில் எனக்கு பல்வேறு கழக அணிகளில் இருந்தும், சென்னையில் இருந்தும் விளையாட அழைப்பு வந்தவண்ணம் உள்ளன.

எனது உடல் எந்தளவுக்கு ஒத்துழைக்கிறதென்பதை கவனிக்க வேண்டும். டெஸ்ட் போட்டியில் பந்துவீச எனது உடல் ஒத்துழைப்பது கடினம். உடல் ஒத்துழைக்கா விட்டால் என்னை விளையாட நிர்ப்பந்திக்க மாட்டேன்.

இருபது-20 போட்டியில் எனது நாட்டுக்காக விளையாடவில்லை. ஒருநாள் போட்டியில் பந்து வீசுவதை சமாளிக்க முடியும் என்று நினைக்கிறேன் என்றார். இந்திய அணியை அதன் சொந்த மண் ணில் வீழ்த்துவது கடினமாக இருப்பது ஏன் என்று கேட்டதற்கு,

இந்திய அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது என்பது எந்த அணிக்கும் எளிதான காரியம் அல்ல. 1997 ஆம் ஆண்டில் எங்கள் அணி நல்ல நிலையில் இருந்த போது கூட இந்தியாவில் நடந்த 3 டெஸ்ட் போட்டியில் அனைத்திலும் சமனிலைதான் செய்தோம். இந்தியாவில் ஆடுவது என்பது எப்போதும் கடினமான விஷயமாகும்.

தனது சொந்த மண்ணில் எப்படி ஆட வேண்டும் என்பது இந்திய அணியினருக்கு நன்கு தெரியும். இந்தியாவை போல் நாங்களும் எங்கள் சொந்த மண்ணில் பலமான அணியாகும் என முரளிதரன் கூறினார்.

## ஐ.பி.எல். ஏலத்திற்கு 97 வீரர்கள் விண்ணப்பம்

(மும்பை)

மூன்றாவது ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகிறது. இந்த தொடருக்கு புதிதாக வரும் வீரர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதி ஏலம் விடப்படுகிறார்கள்.

அதுமட்டுமன்றி பாகிஸ்தான் வீரர்களுடனான ஒப்பந்தம் முறிந்துவிட்டதால் அவர்களும் ஏலம் மூலம் மீண்டும் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் ஆட முடியும் என்று அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து அப்ரிடி, முகமெட் அமீர், உமர் அக்மல், முகமெட் ஆசிப், சல்மான் பட், அப்துல் ரஷாக் உள்பட 26 பாகிஸ்தான் வீரர்கள் ஏலத்திற்கு விண்ணப்பித்துள்ளனர்.

இதேபோல் அங்கீகாரம் அற்ற ஐ.சி.எல். அமைப்பிலிருந்து வெளியேறிய நியூசிலாந்தின் ஷேன் பொன்ட், கிறிஸ் கெய்ன்ஸ், மார்ட்டீன் (அவுஸ்திரேலியா), ஜஸ்டின் கெம்ப் (தென்னாபிரிக்கா), மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் வீரர்களான சர்வான், கங்கா, கமார் ரோச், இலங்கையில் கண்டாம்பி, தரங்க, அவுஸ்திரேலியாவின் பிராட் ஹடின், பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல்ஹசன் உள்ளிட்டோரும் ஏலத்திற்கு தங்கள் பெயரை பதிவு செய்துள்ளனர்.

மொத்தம் 97 வீரர்கள் ஏலத்திற்கு தங்கள் பெயரை கொடுத்திருக்கிறார்கள். இந்தப்பட்டியல் ஒவ்வொரு அணிகளுக்கும் அனுப்பி வைக்கப்படும். அணியின் உரிமையாளர்கள் குறிப்பிட்ட வீரர்களை தேர்வு செய்வார்கள் அந்த வீரர்கள் தான் ஏலப்பட்டியலில் இடம் பெறுவார்கள்.

## மொகமெட் ஆசிப் மிரட்டல்; அவுஸ்திரேலியா சுருண்டது

(சிட்னி)

மொகமெட் ஆசிப்பின் வேகத்திற்கு ஈடு கொடுக்க முடியாமல் அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 127 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சுருண்டது.



அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் கடந்தவாரம் மெல்பேர்னில் நடைபெற்ற முதலாவது டெஸ்டில் வெற்றிபெற்று அவுஸ்திரேலிய அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் இரண்டாவது போட்டி நேற்று சிட்னியில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் 127 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதில் மைக்கெல் ஜோன்ஸன் 38 ஓட்டங்களையும் மைக்கெல் ஹசி 28 ஓட்டங்களையும் ஹயூரிச் 21 நோர்த் 10 ஓட்டங்களையும் அதிக பட்சமாக எடுத்தனர்.

பந்துவீச்சில் மொகமெட் ஆசிப் 20 ஓவர்கள் பந்துவீசி 6 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 41 ஓட்டங்களைக் கொடுத்து 6 விக்கெட்டுக்களையும் மொகமெட் சமி 12 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 27 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் உமர்குல் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்றைய முதல்நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 14 ஓட்டங்களை எடுத்துள்ளது.

இதில் இம்ரான் பர்காத் 09, சல்மான் பட் 3 ஓட்டங்களை எடுத்தனர். நேற்றைய முதல் நாள் ஆட்டம் மழை காரணமாக மதிய போசன இடைவேளைக்கு பின் ஆரம்பமானதுடன் ஆட்டநேர முடிவிலும் போதிய வெளிச்சமின்மை காரணமாக முன்னதாக நிறுத்தப்பட்டது.

இதனால் முதல் நாள் ஆட்டம் 48.3 ஓவர்கள் மட்டுமே வீசப்பட்டது. இப் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## வடமராட்சி பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டி

(வடமராட்சி)

வடமராட்சி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16-18 வயதுபிரிவினருக்கான உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியின் அரையிறுதிப்போட்டிகள் நேற்று வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழகத்தில் நடைபெற்றது.

16 வயது பிரிவினருக்கான அரையிறுதிப் போட்டியில் தேவரையாளி இந்துக்கல்லூரி அணியும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அணியும் மோதின.

இதில் தேவ்ரையாளி இந்துக்கல்லூரி 3:0 என்ற கோல்கணக்கில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தெரிவானது.

மற்றும் ஒரு அரையிறுதிப்போட்டியில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி, இமையாணன் அ.த.க. பாடசாலையை 4:1 என்ற கோல் அடிப்படையில் வெற்றி பெற்றது.

18 வயது பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்கமிசனை எதிர்த்து கொற்றாவத்தை அ.த.க. பாடசாலை 3:1 என்ற தண்டனை உதை மூலம் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

மற்றுமொரு போட்டியில் தேவரையாளி இந்துக்கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள மூன்றாம் இடத்துக்கான போட்டிகள் 16 வயதுப்பிரிவில் விக்னேஸ்வராக் கல்லூரியை எதிர்த்து இமையாணன் அ.த.க. பாடசாலையும் 18 வயது பிரிவில் நெல்லியடிமத்திய மகாவித்தியாலய அணியை எதிர்த்து கொற்றாவத்தை அ.த.க. பாடசாலையும் மோதவுள்ளன. நாளை இறுதிப் போட்டி 8.30 மணிக்கு வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறும்.

(ச-24)







யாழ். மாவட்டத்தில் கிரிக்கெட் மைதானம் அமைத்தல் தொடர்பாக ஆராய யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவர் ஏ.டி.எஸ்.சில்வாவை சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண பிதா. ஜெரோ செல்வ நாயகம் வரவேற்பதையும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தை தலைவர் அடங்கிய குழுவினர் பார்வையிடுவதையும். யாழ்ப்பாண கிரிக்கெட்சபைச் செயலாளரிடம் பந்துகள் கையளிப்பதையும் படங்களில் காணலாம்.

படங்கள்:- சுரேஷ்

## ஜனாதிபதியின் பதிலுக்காக காத்திருக்கும் சர்வகட்சிக்குழு

(கொழும்பு)

சர்வகட்சிப் பேரவை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பதிலுக்காக காத்திருப்பதாக பேராசிரியர் திஸ்ஸவிதாரண தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி பேரவையின் இறுதிப்பரிந்துரை தொடர்பான அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதியின் பதிலுக்காக காத்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் நடைபெற விருப்பதனால் ஜனாதிபதியினால் இந்த அறிக்கை குறித்து கவனம் செலுத்த போதியகால அவகாசம் கிடைக்கவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வுத்திட்டத்தை வழங்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் மாற்றம் எதுவுமில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## அமைச்சர் சந்திரசேகரனின்...

தேசிய தோட்டத்தொழிலாளர் சங்கத்தின் தலைவரும் ஊவா மாகாண சபை உறுப்பினருமான கே.வேலாயுதம் தெரிவித்துள்ளார்.

பெ.சந்திரசேகரனின் மறைவு குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அமைச்சர் சந்திரசேகரன் அவர்கள் மலையக இளைஞர்கள் யுவதிகளின் மேம்பாட்டுக்காகவும் அவர்களின் வளர்ச்சிக்காகவும் தன்னை உறுதியாக அர்ப்பணித்துக் கொண்டவர்.

ஒருதொழிச்சங்கவதியாகதனது மலையக மக்களின் பிரச்சினைகளை மாத்திரமல்லாமல் முழு நாட்டு மக்களின் பிரச்சினைகளை தேசியரீதியில் மட்டுமல்லாமல் சர்வதேசரீதியாகவும் கொண்டுசெல்ல பெரிதும் பாடுபட்டவர் என்றார்.

மறைந்த பெ.சந்திரசேகரன்தாம் சார்ந்த சமூக சிந்தனைகள் மூலம் தூண்டப்பட்டு முன்னணிச் செயற்பாட்டாளராக விளங்கியவர் என சமூக சேவைகள் மற்றும் சமூகநலத்துறை அமைச்சருமான டகளஸ் தேவானந்தா அவர்கள் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இவரின் இழப்பு மலையக மக்களுக்குஈடுசெய்யமுடியாதஇழப்பு என்றும் அமைச்சரின் இரங்கல் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சரத் பொன்...

இந்த ஊர்வலத்தின் மீது ஆளும் கட்சியினை சேர்ந்தவர்கள் வீதி போக்குவரத்திற்கு இடைஞ்சல் இருப்பதாக கூறி தாக்குதல்களை மேற்கொண்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

எனினும் வீதி இடைஞ்சல் எதுவும் ஏற்படவில்லைஎனகூறிய பொலிஸார் பின்னர் பாதுகாப்பு கொடுத்துள்ளதாக பொலிஸ் பேச்சாளர் கூறியுள்ளார். (ச-5)

## ஜெனரல்...

எதிராக சுமத்தப்பட்டு வரும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பிலும் பகிரங்கமாக பதிலளிக்கத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்படும் அரசாங்க அதிகாரிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக ஜே.வி.பி கட்சி தெரிவிக்கின்றது.

தேர்தல் ஆணையாளரின் உத்தரவுகளை மீறி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்து வரும் அரசாங்க உயரதிகாரிகள் தொடர்பில் அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக ஜே.வி.பியின் பிரசார செயலாளர்விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு தேர்தல் சட்டத்தை மீறிச் செயற்படும் நபர்கள் தொடர்பிலான அறிக்கை விரைவில் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்படஉள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரின் சார்பில் சில உயர் அரசாங்க அதிகாரிகள் பிரசாரங்களை முன்னெடுத்து வருவதாக அவர் தெரிவித்துள்ளார். (ச)

## சந்திரசேகரனின்...

நிகழ்ச்சியில் எம்மைப் பற்றி தவறாக கூறப்பட்டுள்ளது. மறைந்த அமைச்சர் சந்திரசேகரனின் மறைவினைப் பயன்படுத்தி நாம் அரசியல் லாபம் தேடமுயல்கின்றோம் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எம்மைப் பொறுத்தவரையில், எமதுகட்சியை பொறுத்த வரையில் எமக்கு அவ்வாறான எண்ணமும் இல்லை ஒருவரின் மறைவின் மூலம் நாம் அரசியல் செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றும் ஆறுமுகன் தொண்டமான் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

## பொன்சேகாவுக்...

பொன்சேகாவிற்கு எதிராக பல்வேறு குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்படுகின்றன.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து பதிலளிப்பதற்கு ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு அந்தந்த ஊடகங்கள் நேரத்தை ஒதுக்க வேண்டுமென தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தமக்கு எதிராக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்குமாறு ஜெனரல் சரத் பொன்சேகா தேர்தல் ஆணையாளரிடம் எழுத்து மூலம் விடுத்த கோரிக்கையை அடுத்து தேர்தல் ஆணையாளர் இந்த உத்தரவினை பிறப்பித்துள்ளார்.

வேட்பாளர்களுக்கு எதிரான வகையில் ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டால் அவர்களுக்கு பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டுமென தேர்தல் ஆணையாளர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## ஊழல் மேற்கொண்ட...

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

அரசு மேற்கொண்ட போரியல் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களால் மேற்குலக நாடுகளிற்கு பயணம் மேற்கொள்ளும் ஜனாதிபதிகளும், படை அதிகாரிகளும் கடும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர்.

இந்த நிலையில் அதிகாரி களிற்கு மேலும் ஒரு தலையிடி ஏற்பட்டுள்ளது.

தமது நாடுகளில் ஊழல்கள் புரிந்த அதிகாரிகளை அமெரிக்காவிற்குள் நுழைவதற்கு தடை விதிக்கும் சட்டம் ஒன்றை அமெரிக்கா விரைவில் நடைமுறைப்படுத்த உள்ளது.

பொதுமக்களின் பணத்தை தவறாக பயன்படுத்திய வெளிநாட்டு அதிகாரிகள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் அமெரிக்காவில் நுழைவதற்கு தடை கொண்டுவரப்படவுள்ளது.

எனினும் அதிகாரிகள் ஊழல்களை மேற்கொண்டதற்கான உறுதியான ஆதாரங்கள் முன்வைக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்கா இந்த சட்டத்தை நடைமுறைப் படுத்தினால் இலங்கையில் உள்ள பல அரச தலைவர்கள் அமெரிக்கா செல்வதை மறந்து விட வேண்டிய நிலை ஏற்படலாம் என வெளிவிவகார அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (ச-5)


# மரண அறிவித்தல்

## வேலுப்பிள்ளை மோகனநாதன்

### அதிபர், அராலி இந்துக் கல்லூரி



கலைநகர், வட்டு வடக்கு, சித்தன்கேணியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வே.மோகனநாதன் (அதிபர், அராலி இந்துக் கல்லூரி) அவர்கள் 03.01.2010 கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை கனகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா சாரதாம்பாள் தம்பதியினரின் மருமகனும், திலகராணியின் அன்புக் கணவரும், கோகுலன் (கணித புள்ளிவிபரவியல்துறை யாழ்.பல்கலைக்கழகம்), திவாகரன் (வெளிவாரி பட்டப் பிரிவு மாணவன் யாழ்.பல்கலைக்கழகம்), சுவேதிகா (A/L 2010 கலைப்பிரிவு மாணவி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார். அன்னார் லோகேஸ்வரதேவி சச்சிதானந்தன், ஜெகயோதீஸ்வரதேவி திருவருள்நாதன், சிவநாதன் (சுவிஸ்), தவநாதன் (ஆசிரியர் தி/ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரி), குகனேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனபாக்கியலட்சுமி கனகரத்தினம் (கொழும்பு), நித்தியானந்தம் (கணக்காளர் கொழும்பு), சச்சிதானந்தம் (அவுஸ்திரேலியா), தயானந்தன் (வவுனியா), தாயமணி கருணானந்தசிவம், முருகானந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறியத்தரப்படும்.

வட்டு. வடக்கு,
சித்தன்கேணி
021 300 2666

தகவல்
குடும்பத்தினர்

(C-4116)



## NEW SCIENCE ACADEMY

கன்னாதிட்டி யாழ்ப்பாணம்

### தரம் 9 ,10, 11 வகுப்புக்கள் ஆரம்பம் கல்வியாண்டு 2010

திகதி 05.01.2010

| | | |
|---|---|---|
| ★ தமிழ் | :- | B. சற்குணராஜா |
| ★ கணிதம் | :- | P.உதயன் |
| | | B.உல்லாசனன் |
| ★ விஞ்ஞானம் | :- | M.A. நிரோஜன் |
| | | M.பிரியந்தன் |
| ★ ஆங்கிலம் | :- | P.வாசவன் |
| ★ சமயம் | :- | T.சஜீவன் |
| ★ வரலாறு | :- | K.ரவிக்குமார் |
| ★ வர்த்தகம் | :- | S.ஆயவன் |
| ★ புவியியல் | :- | J.ஜெயகணேசன் |
| ★ சுகாதாரம் | :- | S.கோபி |

- யாழ் மண்ணில் முன்னணி ஆசிரியர் குழாம்
- அலகு ரீதியான மீட்டலுடன் கூடிய மாதாந்த பரீட்சைகள்
- தவணைப் பரீட்சைகள்
- உடனுக்குடன் தேர்ச்சி அறிக்கைகள் முன்னணி மாணவர்களுக்கு பரிசில்கள்
- ஒவ்வொரு தவணையும் பெற்றோர் ஆசிரியர் சந்திப்பு
- ஒழுக்கம் கட்டுப்பாட்டுடன் கூடிய கண்ணியமான கற்பித்தல்

தொடர்பு :- NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD
JAFFNA

(C-4115)



## புதிய நிர்வாகத்தில் நியூ கேம்பிறிச் புதிய பொலிவுடன்

அளவெட்டி

05/01/2010 ல் A/L 2012 கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள் ஆரம்பமாகின்றன

- தரம் 1 முதல் O/L வரை சிறப்பான ஆசிரியர் குழுவுடன் புதிய பிரிவு ஜனவரி 5 ல்.
- தமிழ் மொழி-ஆங்கில மொழி மூலம்
- தரம் -5 விசேட வகுப்பு - ஆசிரியர் அன்பழகனின் பரீட்சைகள்
- நலன்புரி நிலையங்களிலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்க கட்கு அனுமதி முற்றிலும் இலவசம்.
- விசேட ஆங்கில-சிங்கள வகுப்பு ஆரம்பமாகின்றது

By:- பிரியதர்ஷன

(174)



## வைத்திய சேவை

தினமும் மாலை 3.00 மணி தொடக்கம் இரவு 7.00மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலை டாக்டர்களினால் சிகிச்சையும், ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன.

இடம்:-THE MEDILAND
த மெடிலான்ட்
(பாமஸி, கிளினிக்)
ஆலடிச் சந்தி, மானிப்பாய்.

(C-4117)



## SUBRA (i4)

சித்தன்கேணி

இன்று ஆரம்பம் 05.01.2010 இல் மாலை 4.30 A/L 2012

- 2009 A/L 7 மாணவர்கள் 3A பெறுபேறு. 49 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி
- நலன்புரி நிலையங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு அனுமதி முற்றிலும் இலவசம்.

தரம் 1 முதல் O/L வரை புதிய பிரிவு II ஆரம்பம் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) 05.01.2010 மாலை 4.30

(173)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.